

# இளையராஜாவும் இசைக்கருவிகளும்

தொகுப்பு

இ.சு.முரளிதரன்

# இளையராஜாவும் இசைக்கருவிகளும்



தொகுப்பாசிரியர்

இ.சு.முரளிதரன்

இளையராஜாவும் இசைக்கருவிகளும்(கட்டுரைகள்)/ தொகுப்பாசிரியர்:இ.சு.முரளிதரன் / முதற்பதிப்பு: 2021 ஆடி / இரண்டாம் பதிப்பு 2021 புரட்டாதி/ © மு.சாந்தினி / அட்டைப்படம்: கே. பரந்தாமன் (தொடர்புக்கு-00919942323065)/ வடிவமைப்பு: க.பரணீதரன்/ வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 52/ விலை: 250.00/ அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி, இலங்கை

Ilaiyarajavum Isaikaruvikalum (A collection of articles) / R.S.Muraleetharan/ First Edition: 2021 July /Second Edition : 2021 September © M.Shanthini/ Cover : K.Paranthaman(Contact - 00919942323065)/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 52 / Price: 250.00/ Printed at Baranee Printers, Nelliady, SriLanka

ISBN: 978-624-5881-07-9

ஜீவநதி வெளியீடு – 196

இளையராஜாவின் இசை என்பது
கடவுளின் வாசனை
கொண்டாட்டத்தின் அடையாளம்
தொன்மத்தின் நீட்சி
யுகத்தின் வரைபடம்
முடிவிலி வடிவ முகிலினம்
காவியக் கனதிப் புன்னகை
வேலைத்தளத் தேநீர் இடைவேளை

தேவலோகத்திற்கு மட்டுமே
அனுமதிக்கப்பட்டிருந்த
அமிர்தத்தை
பூமிக்கு வழங்கிய
அற்புதக் கலைஞனுக்கு
இந்நூல் சமர்ப்பணம்!

# தொகுப்புரை


*தமிழ் மீது முதற்காதலும் இசைஞானி இசைமீது இரண்டாவது காதலும் தோன்றியது. பெண்மீது காதல் முளைக்கும் முன்பே அவரின் இசைப்பண்மீது முளைத்து விட்டது. தரமான இசையை எவர் தந்தாலும் ஏற்கும் பக்குவத்தோடு அமைவது இளையராஜா இசைக்சுவைஞர்களின் பண்பென நம்புகிறேன். வணிக மதிப்பு என்ற மாயையைக் கொண்டு இசையை எடை போடுதல் அற்பமானது. நாம் நிம்மதியாக வாழ விழித்திருந்து செயலாற்றுதல், எம்நோய்க்கு மருந்தறிய வலியேற்றல் என்பன தாய்மைக்கும் மருத்துவத்திற்கும் உரித்தான பண்புகளாகும். இப்பண்பு இளையராஜாவுக்கும் பொருந்துமென நம்புவோர் அவரது இரசிகர்களாக முகிழ்க்கிறார்கள்.*

*இளையராஜாவின் புல்லாங்குழலோசை மீது தீராத வேட்கை கொண்டதால், "இளையராஜாவும் புல்லாங்குழலும்" என்ற பதிவினை ஜீவநதியிலே எழுதினேன். பல்வேறு திசைகளிலிருந்தும் பாராட்டுகள் குவிந்தன. ஏனைய இசைக்கருவிகள் குறித்தும் கட்டுரைகள் வெளிவந்தால் தொகுத்து நூலாக்கலாம் என்ற எண்ணம் உதித்தது. இசைமீது ஆர்வமுள்ள நண்பர்களை இனங்கண்டு எழுதுமாறு வேண்டுகோள் விடுத்தேன். த.ஜெயசீலன், கானா.பிரபா, ஜெயபாரதி கௌசிகன், வெற்றி துஸ்யந்தன், த.பார்த்திபன், யாத்ரிகன், ந.குகபரன், மா.செல்வதாஸ், வேல் நந்தன் ஆகியோர் மிகுந்த ஈடுபாட்டுடன் கட்டுரைகளை எழுதினார்கள். "ஜீவநதி" பிரசுரித்துப் பெருமை சேர்த்தது. இக்கட்டுரைகளை எழுதிய நண்பர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றேன்.*

*முகப்போவியம் இத்தொகுப்பிற்கு பிறிதொரு பரிமாணத்தை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அட்டைப்பட ஓவியத்தை வரைந்த, தமிழகம் சேலம் மாநகரைச் சேர்ந்த ஓவியர் K. பரந்தாமன் அவர்களுக்கு இதயங்கனிந்த நன்றி! என் முன்னேற்றங்களில் தோளோடு தோள் நிற்கின்ற நண்பரும் "ஜீவநதி" ஆசிரியருமான க.பரணீதரன் அவர்களே இத்தொகுப்பு வெளிவரப் பிரதான பின்புலம்! நூலினை அழகுற வடிவமைத்து, வெளியீட்டுத் தருகின்ற நண்பர் க.பரணீதரனுக்கு கோடான கோடி நன்றியினைப் பகிர்ந்து தொகுப்புரையினை நிறை செய்கின்றேன்.*

- இ.சு.முரளிதரன்

# இளையராஜாவும் புல்லாங்குழலும்




**வா**னொலியைக் கேட்ட படியே கழிந்த போர்க்கால ஊரடங்கு இரவுகளிலும், பத்துச் சோதனைச் சாவடிகளில் இறங்க வேண்டிய பதினாறு கிலோமீற்றர் பேருந்துப்பயணங் களிலும் இளையராஜாவின் திரையிசைப் பாடல்கள் அச்சத்திலிருந்து கணநேரமேனும் மீட்டெடுத்து அமைதி தந்தன. இளையராஜாவை இரசிப்போருக்கு, இசைக்கால்கோளாகவோ, வரி களின் நுண்ணிடை வெளிகளிலோ, சரணங்களின் நடுவிலோ, சாகசம் நிகழ்த்துகின்ற புல்லாங்குழல் மீதும் அலாதியான ஈர்ப்பு இருக்குமென நம்பு கிறேன். சுதாகர், அருண்மொழி, நிக்கலோஸ்நின்கி போன்ற பலர் அவரது இசைக்குறிப்புகளுக்கு புல்லாங்குழல் வாசித்துள்ளனர். Bass Flute மற்றும் வேய்ங்குழல் என்பவற்றுக்கு இடையிலான நுண்வேறுபாட்டினைக் கருத்திலே கொள்ளாமல் “புல்லாங்குழல்” என்று பொதுமைப்படுத்தியே

இ.சு. முரளிதரன்

*எனது இரசனைக்குறிப்பினைப் பதிவு செய்கிறேன்.*

*ரீதி கௌளை ராகத்திலே ஓரிரண்டு திரையிசைப்பாடல்களே காணப்படுகின்றன. "சின்னக் கண்ணன் அழைக்கிறான்" என்ற கவிக் குயில் திரைப்படப்பாடலும் அவற்றுள் ஒன்று! பாலமுரளி கிருஷ்ணா பாடிய பாடலின் கால்கோள் நிலையில் ஒலிக்கின்ற புல்லாங்குழலும் ரீதி கௌளை ராகத்திலேயே அமைந்திருக்கும். பாடல் முழுமையினை யும் உள் வாங்கும் போது வேய்ங்குழலின் விநோதம் கிறங்கச் செய்யும். காதலின் உள் நீரோட்டத்தினை, உன்னத தருணங்களை, ஏக்கத்தினைப் புல்லாங்குழல் வழியே மிகச்சிறப்பாக வெளிப்படுத்தியிருப்பார்.*

*சத்ரியன் திரைப்படத்திலே இடம்பெற்ற "மாலையில் யாரோ மனதோடு பேச" பாடலில் சொர்ணலதாவின் குரல் அனைவரையும் சுண்டி யிழுக்கும். அக்குரலுக்கு நிகராக அப்பாடலில் வெளிப்படும் புல்லாங் குழலும் விரகதாபத்தினை உச்சநிலைக்கு எடுத்துச்செல்கின்ற விதம் அற்புதமானது. அதே போல "சலங்கை ஒலி" திரைப்படத்தின் "மௌன மான நேரம்" பாடலில் இருவகையான புல்லாங்குழலின் ஓசையை உணர முடியும். பாடலின் முடிவிலே ஒன்று கலந்து அத்வைதமாகிவிடுதல் கதா பாத்திரங்களின் மனநிலையை இனங்காட்டுவதாக அமைந்திருக்கும்.*

*பாடல் வரிகளின் நுண்ணிடைவெளிகளில் மிக அற்புதமாகப் புல்லாங்குழலை ஒலிக்க விடுவதில் மேதையாகவே இளையராஜா இனங் காணப்படுகின்றார். வந்து சொல்லாத உறவை - புல்லாங்குழல் ஓசை - இவநெஞ்சோடு வளர்த்தா - புல்லாங்குழல் ஓசை(முதல் மரியாதை - ராசாவே உன்னை நம்பி) கொட்டு மலரே - புல்லாங்குழல் ஓசை - அமுதம் கொட்டு மலரே - புல்லாங்குழல் ஓசை (ஆயிரம் தாமரை மொட்டுக்களே - அலைகள் ஓய்வதில்லை) அன்பே ஓடி வா- புல்லாங் குழல் ஓசை - அன்பால் கூடவா - புல்லாங்குழல் ஓசை (என்னைத் தொட்டு - உன்னை நினைச்சேன் பாட்டுப்படிச்சேன்) இப்படிப் பல பாடல்களில் வேய்ங்குழலில் ஜாலத்தினை நிகழ்த்தியுள்ளார். இராகங் களோடு பொருந்திப்போகின்ற பண்பும் அவரது பாடல்களின் இன்னொரு சிறப்பாகும். போவோமா ஊர்கோலம் (சின்னத்தம்பி) பாடலில் கீரவாணி ராகத்தோடு புல்லாங்குழலின் ஓசையும் பொருந்திப்போவது சிறந்த எடுத்துக்காட்டாகும். புல்லாங் குழலின் இனிய ஓசையைத் தொடர்ந்து பல்லவி ஆரம்பமாவதுமுண்டு. பொன்மானே சங்கீதம் பாடவா (நான் சிகப்பு மனிதன்), எனை என்ன செய்தாய் வேய்ங்குழலே (இவன்) வளையோசை கலகலகல வென (சத்யா) போன்றன இவ்வகைப்பாடல்களுக்கான உதாரணங்களாகும்.* "Nothing But Wind" *இசைப்பேழையில் சேர்க்கப்படாத புல்லாங்குழல்*

*இசையின் சிறுதுண்டே "வளையோசை கலகல" என்னும் பாடலாக மாறியமையும் குறிப்பிடத்தக்கது.*

*பாடலில் சரணங்களுக்கிடையில் புல்லாங்குழலின் நாதத்தினை உயிரோட்டமாக நகர்த்தும் பண்பினையும் பல பாடல்களில் அவதானிக்கலாம். காற்றில் எந்தன் கீதம் (ஜானி) ஏதோ நினைவுகள் (அகல்விளக்கு) கண்மணியே காதல் என்பது (ஆறிலிருந்து அறுபது வரை) போன்றன சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். பாடல் முழுமையும் சுவறிப் பூரண ஜீவிதத்தோடு விநோதம் நிகழ்த்தும் தன்மையினையும் பல பாடல்களில் காண முடியும். அவ்வகைப் பாடல்களே பலரது ஞாபக இடுக்குகளில் இளையராஜாவின் புல்லாங்குழலைப் பசுமையான நினைவாகப் பதிவுசெய்திருக்கும் என நம்புகிறேன். இள நெஞ்சே வா(வண்ண வண்ணப் பூக்கள்), வள்ளி வள்ளி என வந்தான் (தெய்வ வாக்கு), செந்தாழம்பூவில் (முள்ளும் மலரும்), தாலாட்டுதே வானம் (கடல் மீன்கள்), மண்ணில் இந்தக்காதல் (கேளடி கண்மணி), சின்னப்பொண்ணு சேலை (மலையூர் மம்பெட்டியான்) ஆயிரம் மலர்களே மலருங்கள் (நிறம் மாறாத பூக்கள்), தாலாட்டும் பூங்காற்று (கோபுர வாசலிலே), ஓ வசந்தராசா (நீங்கள் கேட்டவை) இதழில் கதை எழுதும் (உன்னால் முடியும் தம்பி), போன்ற பாடல்களில் காதலின் ஏக்கத்தினை, ஏகாந்தத்தின் கொண்டாட்ட உணர்வை-ஆதரவை நாடும் அந்தரிப்பை, ஆழ் மனதின் பிரதிபலிப்பை எல்லாம் புல்லாங்குழல் வழியே பிரவாகிக்கச் செய்துள்ளார்.*

*திரைப்படப்பின்னணி இசையிலும் புல்லாங்குழலின் வகிபாகம் தனித்துவமாகவே அமைந்திருக்கும். முதல் மரியாதை, வருஷம் 16, அபூர்வ சகோதரர்கள், அழகி, தளபதி, வீடு, நாடோடித் தென்றல், நந்தலாலா போன்ற பல படங்களில் மனித உணர்வுகளின் வடிகாலாக, சம்பவங்களின் குறியீடாக, முடிவிலி வலியின் விசும்பலாக, தீரா நேசத்தின் தொடுகையாக, தடுமாறும் கணங்களின் நெகிழ்பதிவாகப் புல்லாங்குழல் இசையை வெளிப்படுத்தியுள்ளார்.*

*"அபூர்வ சகோதர்கள்"திரைப்படத்தில் "அப்பு" என்ற குள்ளரூபக் கதாபாத்திரத்தின் துன்பியல் தருணங்களைப் புல்லாங்குழல் வழியே வடிவமைத்துள்ளார். அப்பு பிறப்பிற்குப் பின்புலமாக அமையும் நஞ்சு திணிப்புக் காட்சியின் நீட்சியில் தாய் படகிலே மயங்கிக் கிடத்தல், அப்பு காதலில் ஏமாந்து திருமணப் பதிவு அலுவல கத்திலே தடுமாறுதல், தற்கொலை நிகழ்விலிருந்து தாயால் காப்பாற்றப்படுதல், சிறைச்சாலை நோக்கிப் பயணித்தல் ஆகிய காட்சிகளில் அக்கதாபாத்திரத்தின் அவலத்தினை வேய்ங்குழல் வழியே கசியச் செய்து விடுகிறார்.*

*“தளபதி” திரைப்படத்திலே “சின்னத் தாயவள் தந்த ராசாவே” பாடலை புல்லாங்குழல் ஓசை வழியாக உருமாற்றித் தாய்மை உணர்வின் குறியீடாக்கிப் பல காட்சிகளில் பின்னணியாக ஒலிக்கச் செய்கிறார். தாய்மைக்குச் “சின்னத்தாயவள் தந்த ராசாவே” பாடலைத் தேர்ந்தெடுத்ததைப் போலக் காதலின் துன்பியலுக்கு “யமுனை ஆற்றிலே” பாடலைப் பயன்படுத்துகிறார். காதல் ரத்தாகும் உணர்ச்சிக் கொந்தளிப்பினையும் புல்லாங்குழல் வழியே ஒலிக்கச் செய்து விட்டு பிறிதொரு நாளில் நிகழும் பக்குவ நிலைப்பட்ட சந்திப்பில் அப் பாடலை வேறு இசைக்கருவி வழியே எடுத்தாள்வதும் குறிப்பிடத் தக்கது. “ஆண்பாவம்” திரைப்படத்தின் நடுவண் உணர்வின் இசையை (*Theme Music*) புல்லாங்குழலால் வடிவமைத்ததனூடாக சராசரித் திரைப்படமொன்றின் பார்வையாளனை எட்டுத் திசைகளையும் தாண்டிப் பெயரிலித் திசை நோக்கி நகர்த்திச் சென்று விடுகிறார்.*

*“நாடோடித் தென்றல்” திரைப்படத்தில் வேய்ங்குழலானது நாத படிமமாகி நதி போலப் பயணித்துக் காமச் சுழலுக்குள் இழுத்துச் செல் வதை உணர முடியும். மெல்ல மெல்லக் காமத் சித்திர மொன்றைக் குழலிசையால் கட்டியெழுப்பி விடுகிறார். தணலில் எரிந்தே மூங்கில் குழலாகிறது. மீளவும் தழலில் இசையை போட்டுக் கங்குகளின் வெப்பத்தினைக் காதுகளில் சேர்ப்பிக்கிறார். சிவரஞ்சனி ராகத்திலே அமைந்த “சந்தன மார்பிலே” பாடற் காட்சியில் புல்லாங்குழலானது பாலுணர்வின் பள்ளி எழுச்சியாகவும், மன்மதச் சதுரங்கமாகவும் மாறி விடுகிறது. இளமையின் தாபத்தினை, காதலின் வலியினை, கட்டற்ற மோகத்தினை இசை வழியே ததும்பச் செய்கிறார். இரும்புக் கம்பி யினைக் காய்ச்சிச் சூடு போடுகின்ற காட்சியிலும், நாயகியின் கன்னங் கள் விழி நீரால் நனையும் தருணத்திலும் அநாம வெளிக்குள்ளே அழைத்துச் செல்லும் புல்லாங்குழல் நம்மைத் தடுமாறச் செய்கிறது.*

*“முதல் மரியாதை” திரைப்படத்தில் “செவிலி” கதாபாத்திரத் தின் மரணத்தின் போது, வானத்தை நோக்கி எறியப்பட்ட புல்லாங் குழல் வீழ்கின்ற தருணத்தில் குழல் நாதம் மனதைக் குடைகிறது. “*How to name it*” இசைப் பேழையின் சிறு துண்டான இசை கோர்வையாக “வீடு” திரைப்படத்தில் இடம்பெறும் குழலின் வெளிப்பாடும் அலாதி யானது! மேற்கூறிய படங்களைப் பார்த்தவர்களால் வேய்ங்குழலிசை நிகழ்த்திய மாயவித்தையினை அவ்வளவு சீக்கிரம் மறந்துவிட முடியாதென்றே நம்புகிறேன். இமைமூடி இரசிக்கும் தருணங்களில் இளையராஜாவின் புல்லாங் குழலோசை மயிலிறகாக மாறி இதயம் வருடிப் பரவசத்தை நல்கும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.*

# இசைஞானியும் வயலினும்



இசையானது மனித நாடித்துடிப்பில் கலந்துள்ளது. இசையையும் மனிதனையும் பிரிக்க முடியாத அளவுக்கு இசைக்கும், மனிதனுக்கும் பந்தம் உள்ளது. தாயின் கருவறையில் குழந்தைக்கு எவ்வாறு பந்தம் உள்ளதோ அதே போல் மனிதனுக்கும் இசைக்கும் ஆதி முதல் அந்தம் வரை பந்தம் உள்ளது. இசை பற்றி அறிந்து கொள்ளல் ஆழ்கடலில் மூழ்கி முத்து எடுப்பது போன்ற செயற்றிட்டமாகும். இசையானது பண்டைய காலப் பண்ணிசையில் தொடங்கி கர்நாடக இசையாக வளர்ச்சியடைந்தது. இன்று இசைக்கே அரசனாகக் கர்நாடக இசை விளங்குகின்றது. மேலைத்தேய இசை, ஹந்துஸ்தானி இசை, பக்தி இசை , மெல்லிசை, நாட்டார் இசை, திரை இசை, கானா இசை, “ராப்” இசை அனைத்துமே கர்நாடக இசையின் அடிப்படை ஸ்வரங்களான ஸரிகம பதநி எனும் ஸப்தஸ்வரங்களிலிருந்தே தோற்றம்

ஜெயபாரதி கௌசிகன்

பெறுகின்றன. எவன் ஒருவன் கர்நாடக இசையை முறைப்படி பயில்கிறானோ அவனால் உலகிலுள்ள எந்த விதமான இசையையும் பாட முடியும் என்பது எனது நம்பிக்கை. அந்த வகையில் இசைஞானி இளையராஜா உலகிலுள்ள அனைத்து மக்களையும் தனது இசையால் கட்டிப் போட்டவராவார். தமிழ்த்திரையிசையானது இசையை இலகுவான முறையில் மக்கள் மத்தியில் இரண்டறக் கலக்கச் செய்யும் ஓர் களமாக அமைந்துள்ளது. இசைஞானி இளையராஜா திரையுலகில் புகுந்த காலம் இசைக்கே ஓர் பொற்காலம் என்று கூறுவது சாலப் பொருந்தும். "Ilaiyarajas music is therapy for soul." நரம்புக்கருவி, தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி என அனைத்து வகையான இசைக்கருவிகளையும் கையாளக் கூடிய வல்லமை பெற்றவர். அவர் ஹார்மோனியத்தில் கைவத்தால் போதும் இசையானது அடைமழை யாகப் பொழியத் தொடங்கி விடும்.

திரையிசைப் பாடல்களில் பல்வேறு இசைக் கருவிகளைக் கையாண்டு இசையை வழங்கிய இவர் வயலின் வாத்தியத்தினை மிகச் சிறப்பாகத் தனித்துவமான பாங்கில் கையாண்டிருப்பதும் விசேட அம்சமாகும். அவரது இசைக்குழுவில் குறைந்தது 5 Cello Violin மற்றும் 30 Cello Violin ஒன்றாகப் பல்வேறு பரிமாணங்களில் ஒலிப்பதை அவதானிக்க முடிகிறது. அவரது வயலின் இசையமைப்புக்கள் மூலம் பலரது நோய்கள் குணமடைந்துள்ளதையும், மக்களது மன உளைச்சல் நீங்கி தெளிவான மனநிலையில் வாழ்வதையும் அனுபவ ரீதியாக எம்மால் உணர முடிகிறது. பல்வேறுபட்ட புதிய புதிய ஒலியிழை களை அவர் வயலின் மூலம் கட்டமைத்துள்ளார்.

1969ம் ஆண்டு காலப் பகுதியில் இளையராஜாவுடன் இணைந்த பிரபல வயலின் வாத்தியக் கலைஞர் "வயலின் பிரபாகர்" இன்று இசைஞானியின் இசைக் குழுவில் Conductor ஆக பணியாற்றி பிரமாண்டமான இசையமைப்பை தனது கைகளின் கட்டுப் பாட்டிற்குள் வெளிப்படுத்துகிறார். அவர் வயலின் வாத்தியத்தை King of Instruments - violin எனக் குறிப்பிடுகிறார். வயலின் வாத்தியமானது close to human voice அதாவது மனிதனின் குரலோடு ஒத்து ஒலிக்கக் கூடிய ஓர் வாத்தியம் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

1991ம் ஆண்டு தளபதி திரைப்படத்தில் "சுந்தரி கண்ணால் ஒரு சேதி" என்ற பாடலுக்கு இசைஞானியவர்கள் தனது Sympony format இல் குறுகிய நேரத்தில் இசையமைத்ததையும் பிரபாகர் சிலாகித்துக் கூறியுள்ளார். மேலும் தாம் அனைவருமே தம்மை அறியாமலே

எழுந்து Standing avation வழங்கினோம் என்கிறார். குழுவில் உள்ளவர்கள் பாடலின் chords ஐ மறந்து விடுவார்கள். ஆனால் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் அனைத்து பாடல்களின் chords உம் இசைஞானியின் மனதில் பதிந்திருக்கும் அத்தனை அசாத்தியத் திறமை மிக்கவர் இசைஞானி என்றும் கூறுகிறார்.

வயலின் பிரபாகர் அவர்களால் இசைஞானியின் இசையில் "புன்னகை மன்னன்" திரைப்படத்தில் வாசிக் கப்பட்ட திஸ்ரநடையில் அமைந்த இசைக் குறிப்பான

"ஸரி ஸரீகமாபா //, ; ; ; ;, பாம //

கா, மா கரீ காரி //ஸா; ; ; ; ; //" என்பது

பல்வேறு நுணுக்கங்களோடு அமைந்து மேலைத்தேய நுட்பங்களையும் இணைத்து மிக மிக விறு விறுப்பாக வாசிக்கப்பட்டு அனைவரது பாராட்டுக்களையும் பெற்று இன்றும் எம்மனதில் நீங்காத இடம் பிடித்துள்ளது. மேலும் "காலகாலமாக வாழும் காதலுக்கு நாங்கள் அர்ப்பணம்" என்ற பாடலிலும் இதே யுத்தியை கையாண்டு அந்தப் பாடலின் காட்சியில் வயலினுடன் ஆடிப்பாடு வதாகவும் அமைக்கப்பட்டு வயலின் வாத்தியத்திற்கே ஓர் தனித்து வத்தை ஏற்படுத்துவதாக அவ்விசையமைப்பு அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

"அந்திமழை பொழிகிறது" என்ற பாடலின் முகிழ்நிலை இசையில் (Introduction music)

ஸா, கா, மா மதநிஸ்நிதமக//

ஸா, கா, மா, மதநிஸ்நிதமக//

என்ற வயலின் இசையை அடுத்து அந்தி மழை பொழிகிறது எனத் தொடங்கும் போது வசந்த இராகத்தைப் பிழிந்து சாறெடுத்துப் பாடலைக் கேட்கத் தூண்டும் வகையில் காதிலே தேன் பாய்வது போல் அந்த இசையமைப்பு அமைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அகவுணர்ச்சிக்கு ஏற்பவும் அவரவர் அனுபவவெளிக்கு அமைவாகவும் முடிவிலிக் கதவுகளை அவ்விசை திறந்து விடுகிறது.

மாயாமாளவகௌளை இராகத்தில் அமைந்த "பூங்கதவே தாழ்திறவாய்" என்ற பாடலில் ஆரம்பக் காட்சியான கதவுகள் திறக்கப் படும் காட்சியில் கர்நாடக இசை இராகத்தை அழகாக, விறுவிறுப் பாக மேலைத் தேய ஹார்மனிக்கல், பாலிபோனி இசையைத் தழுவி ஸ்வரத் தொகுதிகளை ஒன்றன் பின் ஒன்றாகவும், ஒரே நேரத்திலும் வயலின் மூலம் இசைக்க விட்டு வியப்படையச் செய்துள்ளார்.

கதாநாயகி வெட்கப்படும் காட்சியைத் தத்ரூபமாக முதலில் ஸ்வரத் தட்டில் ஸமகமபஸ என அடுத்து வயலினில் ஸரிஸநிநீ மீண்டும் ஸ்வரத்தட்டில் ஸமகமபஸ ஒலிக்க அடுத்து மாகரீஸ என வயலினில் வாசித்து இசையிலே ஒளியூட்டுகிறார் இந்த அமைப்பானது கதாநாயகி வெட்கப்படும் காட்சிக்கு மிகமிகப் பொருந்தும் வகையில் தேய்வழக்கற்ற புதுமையோடு அமைந்துள்ளது. மேலும் கதா நாயகியும், கதாநாயகனும் குளத்தில் மூழ்கி எழும் காட்சிகளுக்கு

பா; ; மா பா ; ; மா/ மபதநிதாமா /பா ; ; ; //

மா, மா, மா மபமகரீஸா/ ரீ , ரீ , ரீ /ஸகரிநீ ;, //

நீ, நீ, நீ கா ; ; ; /கா மா, க ரீ /ஸா ; ; ; //

எனும் ஸ்வரப் பிரயோகம் சாலப்பொருத்தமாகவும் மாயமாளவ கௌளை இராகத்தின் ஸ்வரூபத்தைக் காட்டுவதாகவும் அமைந் துள்ளது. “பூங்கதவே தாழ்திறவாய்” என்ற பாடலில் வயலின் வாத்தியம் அனைத்துப் பகுதிகளிலும் பிரதானமாக வாசிக்கப் பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

மத்தியமாவதி இராகத்தில் அமைந்த “ஆகாய கங்கை பூந்தேன் மலர்சூடி” என்ற பாடலின் இடையிசைப் பகுதியில் கதாநாயகன் தூரத்தில் நடந்து வந்து கொண்டிருக்கிறான். கதாநாயகி தனிமையில் இருந்து கதாநாயகனை நினைத்து வெட்கப்பட்டுக் கொண்டிருக்கும் காட்சியில் வயலினிசையில் கூட்டிசையாக

ஸஸஸஸா நீ /ஸஸஸஸஸா நீ /ஸஸஸஸ ஸா நீ ஸஸஸஸ ஸா; //

என வாசிக்கப்படும் சமநேரத்தில் வேறு வயலின் தொகுதியினர்


பநி /ஸா நிஸ்நிபஸ்நி// ஸா; ; ; நிஸ் //

ரீஸ் ரிஸ் நிநிஸ் //நிமமநிபமநிஸ //

ரிஸரிஸரிஸரிஸரிஸரிஸரிஸரிஸ என்று அதீத எடுப்பில் ஒரே தடவையில் வாசிக்கும் படியான இசையமைப்பு சிருங்காரரசத்தின் உச்ச நிலையை அப்படியே வெளிக் கொணரும் வகையில் அமைந் துள்ளது.

“பொன்மாலைப் பொழுது” என்ற பாடலில் இடையிசையாக அமைந்த வயலினிசை பாடலை மேலும் மெருகூட்டுவதோடு வாழ்க்கை பற்றிய புதிர்களுக்கு பதிலாகவும் அமைகிறது.

இசைஞானியவர்கள் வயலினுக்கு பிரதானம் கொடுத்து இசையமைத்த படங்களில் சிந்துபைரவி படம் குறிப்பிடத்தக்கது. அதில் சாரமதி இராகத்தில் “பாடறியேன் படிப்பறியேன்” என்ற



பாடலுக்கு கர்நாடக இசைப் பாணியில் அனைத்து ஸ்வரங்களுக்கும் போட்டி போடும் வகையில் வயலின் இசையை வழங்கியுள்ளார். மேலும் "நானொருசிந்து காவடிச் சிந்து" என்ற பாடலில் "சிந்து பைரவி" இராகத்தில் தாயும் மகளும் சந்திக்கும் தருணத்தை வயலினிலும், புல்லாங்குழலிலும் மாறி மாறி வழங்கி தாய்பிள்ளைப் பாசத்தை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் கலைவாணியே என அமைத்த கல்யாணி இராக ஆரோகண அமைப்பில் மட்டும் அமைந்த பாடலில் வீட்டில் மங்கள நிகழ்வைக் காட்டும் வகையில் மங்களகர மாகவும், தாயும் மகளும் மீண்டும் சந்திக்கும் கண்ணீர் சிந்த வைக்கும் பாசக்காட்சியை சோகமாகவும் கல்யாணி இராகத்தில் வயலின் மூலம் மாறிமாறிக் காட்டும் திறமை இசைஞானி ஒருவரையே சாரும்.

இது போலவே தாய்மூகாம்பிகை படத்தில் ஜனனி ஜனனீ பாடலில் யமன் கல்யாணியை வயலினில் சிறப்பாக காட்டியுள்ளார். முதன் முதலில் "சல்லாபம்" எனும் இராகத்தை இப்படத்தில் புகுத்தி இசையரசி எனும் பாடலினூடாகவும் வயலினின் பங்களிப்பை கர்நாடக இசைப்பாணியில் வழங்கியுள்ளார்.

இவ்வாறாக ஏராளமான பாடல்களில் இசைஞானியவர்கள் வயலினிசையை உயிரோட்டமாகக் காட்டியுள்ளார். ஆயிரம் அர்த்தங்களை வயலினிசையால் அடுக்கிச் செல்கின்ற எண்ணற்ற பாடல்களைத் தந்துள்ளார். அழியாத நினைவுகளை மீளுருவாக்கும் அவ்விசையின் அரவணைப்பிலே சிறு குழந்தையாகி விடுகின்றோம். பழைய போக்குகளைப் புரட்டிப் போடுகின்ற புதுமையினை பல பாடல்களில் வயலின் இசையால் நிகழ்த்தியுள்ளார். அத்தகைய

பாடல்களில் பின்வருவன குறிப்பிடத்தக்கன.

- அன்னக்கிளி உன்னைத்தேடுதே - அன்னக்கிளி
- பூவில் வண்டு கூடும் - காதல் ஓவியம்
- புத்தம்புதுக் காலை - அலைகள் ஓய்வதில்லை
- காற்றில் எந்தன் கீதம் - ஜானி
- மெட்டி ஒலி காற்றோடு - மெட்டி
- பொத்திவச்ச மல்லிகை மொட்டு - மண்வாசனை
- தென்றல் வந்து தீண்டும் போது - அவதாரம்
- பருவமே புதிய பாடல் - நெஞ்சத்தைக்கிள்ளாதே
- ராமனின் மோகனம் - நெற்றிக்கண்
- ஒரு ஜீவன் அழைத்தது - கீதாஞ்சலி
- ஓ.. வசந்தராஜா - நீங்கள் கேட்டவை
- வான்மேகம் - புன்னகை மன்னன்
- வானுயர்ந்த சோலையிலே - இதயக் கோயில்
- நீ ஒரு காதல் சங்கீதம் - நாயகன்

இடைக்காலப்பாடல்களில் மட்டுமன்றி தற்காலப் பாடல்களுக்கும் வயலினிசையைச் சிறப்பாகக் கையாண்டு “இசைஞானி” என்பதை நிரூபித்துக் காட்டி வருகிறார். அவரின் இசை ஏழேழு ஜென்மத்திற்கும் தொடர்ந்து ஆன்மாக்களை ஆனந்தப்படுத்தட்டும்.

# இளையராஜா பாடல்களில் வீணை



இந்த பூமிப் பந்தில் வாழ்கின்ற அத்தனை ஜீவராசிகளையும் இசைய வைக்கக் கூடியதும் பணிய வைக்கக் கூடியதுமான தனிச்சிறப்பு அது என்றைக்கும் நல்லதொரு இசைக்கான சிறப்புக் களில் மிகப் பிரதானமானது. நல்லதொரு கலா ரசிக மனிதனின் சிறப்புத் தன்மை ஒரு நல்ல இசையின் அத்தனை நுணுக்கங்கனையும் சுக்கு நூறாகப் பிரித்து உள்ளீர்க்கின்ற தன்மையைக் கொண்டிருக்கும். இப்படியான சூழலில் தமிழ் இசை என்று வருகின்ற போது அதன் ஆழ அகலம் என்பது ஒரு குறுகியதொரு வடிவத்திற்குள் கொண்டு வர முடியாதது. தமிழ் சினிமாவின் நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியோடு நெருங்கிப்போன நம் வாழ்தலில் தென்னிந்திய சினிமாவின் தாக்கம் தவிர்க்கப்பட முடியாத ஒன்று. இந்த நீட்சியில் இசை என்று அந்த சொல்லாடலை பாடல்களை மையப்படுத்தி

**வெற்றி துஷ்யந்தன்**

நோக்குகின்ற போது அவ்வளவு எளிதில் இசைஞானி இளையராஜாவையும் அவரது பாடல்களையும் தவிர்த்து விட்டு தமிழ் இசை மரபை எழுதுதல் எக்காலமும் சாத்தியப்பட முடியாத ஒன்று.

கடந்த இரு மாசிகைகளிலும் வெளியான ஜீவநதி சஞ்சிகையில் இளையராஜாவின் பாடல்களில் தாக்கம் செலுத்தும் வாத்தியங்களின் பங்களிப்பு என்கின்ற ஆசான் இ.சு. முரளிதரன் அவர்களின் தொடக்கப்புள்ளி இம்முறை எனக்கான களமாக மருவியிருக்கின்றது. இந்த நிலையில் இளையராஜாவின் பாடல்களில் வீணை வாத்தி யத்தின் பங்களிப்பு என்கின்ற இசைத்துவ தேடலில் கிடைத்தவற்றை வைத்துக் கொண்டு ஒரு நயத்தல் பிரதியாக விரிவடையப் போகின்றது.

இசைஞானி இளையராஜாவைப் பொறுத்தவரை அவரது ஆரம்ப காலம் தொட்டு இறுதியாக வெளிவந்த "சைக்கோ" திரைப் படப் பாடல்கள் வரை அனைத்து வாத்தியப் பயன்பாடுகளையும் இயற்கையான ஒலிச்சேர்ப்பு முறையையும் மிக நீண்டகாலமாக பயன்படுத்தி வரக்கூடிய ஒருபெரு வல்லமை ஆவர். நேரடி வாத்திய ஒலிப்பு முறைக்கு ஊடாக இசையில் புது மரபை கட்டமைத்தவர் களில் இசைஞானி பிரதானமானவர். குறிப்பாக இந்த நரம்புக் கருவிகளில் ஒரு மங்களகரத்தையும் கூடவே துன்பியல் சார்ந்த அனைத்து உணர்வுகளையும் தாங்கி வரக்கூடிய வாத்தியச் சிறப்பு வீணைக்கு உரியது. பக்தி பாடல்களாக இருந்தாலும் சினிமாப் பாடல்களாக இருந்தாலும் கேட்போரை மயக்க வைக்கக் கூடிய சிறப்பு வீணைக்கு உரியது. அதிலும் அந்த வாத்தியத்தை பல்லாயிரம் பாடல்களில் இளையராஜா பயன்படுத்தியிருக்கும் விதம் மிக ரசனை பூர்வமானது.

குறிப்பாக இளையராஜாவின் திரையிசைப் பாடல்களில் திரையில் வந்த சில பக்திமயமான பாடல்களில் அந்த சேர்க்கை மிக அழகானதாக இருக்கும். குறிப்பாக கல்யாணி இராகத்தில் அமைந்த "ஜனனி ஜனனி" பாடல் உண்மையிலேயே மிக அருமையான தொரு பாடல்! அந்தப் பாடலின் பல்லவி முடிவில் வருகின்ற வீணை இசைச் சேர்க்கை மிக அழகாக இருக்கும். அடுத்து "சலங்கையொலி" திரைப்படத்தில் வரும் ஓம் நமச்சிவாய என்னும்படி அமையப்பெற்ற கர்நாடக இசைப்பாடலிலும் சின்ன சின்ன இடங்களில் வீணையை மிக அழகாகப் பயன்படுத்தியிருப்பார். இவற்றைத் திரையிசை தெய்வீகப் பாடல்கள் வகைமைக்குள் அடக்க முடியும்.

காதல் உணர்வை தத்ரூபமாக கொண்டு வரும் வீணை இசையை, தனது பல காதல் பாடல்களில் இளையராஜா மிகச் சிறப்பாக கையாண்டு அதில் வெற்றியும் அடைந்திருக்கிறார். இந்த மாதிரியான கட்டுருவாக்கத்தை தனது காதல் பாடல்களின் கர்நாடக இசைச் சாயல் பாடல்களில் கணிசமாக அழகாக பாவித்திருப்பார். அதிலும் வைதேகி காத்திருந்தாள் திரைப்படத்தில் ஆபோதி இராகத்தில் இடம்பெற்ற "இன்றைக்கு ஏன் இந்த ஆனந்தம்" பாடலில் மிகச் சிறப்பாக வீணையைச் சேர்த்திருப்பார். குறிப்பாக "இன்ர லூட்" எனப்படும் பாடலின் இடை இசையில் மிருதங்கத்தோடு இணைந்து ஒரு வித்தியாசமான உணர்வைத்தந்திருப்பார். இப்படியான வகை யறாக்களில் தொடர்ச்சியாக சலங்கை ஒலி திரைப்படத்தில் "வேதம் அணுவினில் நாதம்" பாடலில் சின்ன சின்ன அசைவுகளிலும் பிரயோகித்திருப்பார். இவற்றை கர்நாடக வகை இசையறாக்களில் உள்ளடக்கலாம்.

மேலும் "இளையவன்" திரைப்படத்தில் இடம் பெற்றிருக்கக் கூடிய "என் இதயம் முழுதும் நீயே நீயே ராசாத்தி" பாடலின் ஆரம்பத்தை வீணையோடு சேர்த்து மிருதங்கத்தையும் இணைத்து மிக ரசனை பூர்வமான ஒன்றாக ஆக்கியிருப்பார் இசைஞானி. மேலும் "மீண்டும் கோகிலா" திரைப்படத்தில் "சின்னஞ்சிறு வயதில் எனக்கோர்" என்ற பாடல் காட்சி வீணையோடு அமர்ந்து ஸ்ரீதேவி பாடுவதாகவே இருக்கும். அப்பாடலில் வீணையை மிக அழகாகச் சேர்த்திருப்பார். தர்மத்தின் தலைவன் திரைப்படத்தில் "முத்தமிழ் கவியே வருக" பாடலில் மிக மென்மையாக நுணுக்கமாக மிக அழகாகவும் பயன்படுத்தியிருப்பார்.

பரதநாட்டியப் பாடல்களுக்கு கர்நாடக இசைச் சாரலில் வீணையை பிரதான வாத்தியமாக சேர்த்திருப்பார். "மனதில் உறுதி வேண்டும்" திரைப்படத்தில் "சங்கத் தமிழ் கவியே" என்ற பாடலை வீணையின் பல சேர்க்கைகளோடு அமைந்திருப்பார். அடுத்து இதே திரைப்படத்தில் இடம் பெற்ற மற்றொரு பரதநாட்டிய பாடலான "கண்ணா வருவாயா" பாடலிலும் வீணையைப் பயன்படுத்தியிருப் பார். "காதல் ஓவியம்" திரைப்படத்தில் "சங்கீத ஜாதி முல்லை" பாடலில் சரணத்தில் "விழியில்லை எனும் போது விழி கொடுத்தாய்" என்கின்ற வரிகள் தொடங்கி முடிய அந்த மெட்டுக் கட்டில் வீணையை விளையாடவிட்டு தாக்க முறச் செய்த அந்த கலைத்துவ கட்டமைப்பு அவருக்கானது.



“பாசப்பறவைகள்” திரைப்படத்தில் யேசுதாஸ் சித்ராவின் குரலில் அமையப்பெற்ற “தென்பாண்டித் தமிழே” என்ற பாடலின் ஆரம்பத்தை வீணையோடு தொடங்கிப் பாடலை அழகுபடுத்தி யிருப்பார். வாத்தியார் வீட்டு பிள்ளை திரைப்படத்தில் இடம் பெற்ற “மணமாலையும் மஞ்சளும் சூடி புது கோலத்தில்” என்ற பாடலின் முழுமையிலும் பல இடங்களில் வீணையை பல்வேறு கோணங்களில் இசைத்திருப்பார். எழுத எழுத திளைத்துக் கொண்டிருக்கும் அவர் இசைசார் பதிவுக்கு எல்லைகள் கிடையாது. இசைசார் குறிப்பை எழுதுவதே அலாதிபிரியமானதென்றால் இசைஞானியின் பாடல் களில் அதுவும் வீணை வாத்திய சேர்க்கையை எழுதுவது கடலின் ஆழ அகலங்களை அறியும் முயற்சியே. இப்படி இப்படி பல பாடல்களில் வீணையை போன்று பலவாத்தியங்களையும் இணைத்து இசையச் செய்த பெருமை அவருக்கானது. இந்த வகையில் சிந்தனைக்கு உடன் துளிர்த்த பாடல்களை வைத்து இசைஞானியின் பாடல்களில் வீணைஇசை என்ற சாராம்சத்தில் எழுதியிருக்கின்றேன். எனது இரசனையும் உங்கள் இரசனையும் இதன் நிறைவில் ஒன்றித்து நிற்குமாயின் அதுவே இந்த பதிவின் நோக்கச் சிந்தனையை சரி செய்யும்.

# இசையின்
# லப் – டப்



*1976 இல் வெளிவந்த "அன்னக்கிளி" படத்தில் அறிமுகமான இளைய இசையமைப் பாளர் இளையராஜாவினால் தமிழ் சினிமாவின் இசை பெரும் மாற்றத்திற்கு உள்ளானது. அது வரை இந்தி இசையமைப்பாளர்களின் ஆதிக்கத் துடன் இந்திப் பாடல்களின் ஆக்கிரமிப்புக்கும் பெருமளவில் உள்ளாகியிருந்த தமிழக சினிமா இசை ராஜாவின் வருகையின் பின் தனித்துவமான தமிழர்களின், தமிழ் வாழ்க்கையின் இசையை, கிராமிய இசையை, சுருதி பேதமற்ற அசலான சாஸ்திரீய இசையை, அதுவரை கேட்டிராத மேற்கத்திய செவ்வியல் மற்றும் ஜாஸ் இசையை, சாதாரண சினிமாப் பாடல்களிலும் கேட்கத் தொடங்கியது மட்டுமல்லாது ஒட்டுமொத்தமாக அவ்விசையோடு ஒன்றத் தொடங்கியது.*

**இ.த.ஜெயசீலன்**

*மிகப்பெரிய இசைஞானத்தோடும், அயராத அசுர பயிற்சியோடும், பசியைக் கூட*

மறந்த முயற்சியோடும், பழைமையையும் புதுமையையும் இரவு பகலாக கற்றறிந்த பலத்தோடும், இன்னோரன்ன புதுத்தெரிவுகள் பரிசோதனைகள் செய்யவல்ல அசாத்திய துணிச்சலோடும், அதற்கு ஏற்கெனவே அச்சூழலில் காணப்பட்ட பீடங்களின் தடைகளற்ற சூழலினாலும், களமிறங்கிய ராஜாவின் இசையின் தரம், தன்மை, பாணி என்பவற்றை ஒட்டு மொத்த தமிழகம் மட்டுமன்றி அதன் அயற்பகுதிகளும் காலப் போக்கில் முழு இந்தியாவும் ஏன் பின் தமிழர்கள் வாழும் நாடுகளும் கூட மறுபேச்சு விமர்சனங்கள் இன்றி ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த சுமார் இருபது வருட காலங்கள் வானொலிகளும் கசற் றெக்கோடர்களும் ராஜாவின் இசையை மட்டும் வழிமொழிந்தன. குறுகிய காலத்தில் யாராலும் தடுக்க, தவிர்க்க முடியாத விஸ்வரூபம் எடுத்தார் இளையராஜா.

சுமார் 45 வருடம் தமிழ் சினிமா இசையில் இளையராஜா கோலோச்சி தொடர்ந்து வெற்றிபெற்று வருவதே சில தரப்பால் தோற்கடிக்கப்பட வேண்டியவராக அவர் கருதப்பட்டதற்கும் காரணமாகியது. மிகப்பெரிய ஆலமரத்தின் கீழ் சிறு சிறு மரங்கள் செடி கொடிகள் தலையெடுக்க முடியாதது போல் ராஜாவின் காலத்தில் சுமார் இருபது ஆண்டுகள் ஏனைய இசையமைப்பாளர்கள் ஏறக்குறைய மௌனித்திருந்ததும் இலகுவில் அவர்களின் இசை மறக்கப்பட்டுக் கொண்டிருந்ததும் கூட நடந்தது.

இன்றுவரை மிக அற்பத்தனமாக அபத்தமாக “அவர் அப்படிக் கதைத்தார்”, மற்றவரை மதிக்கவில்லை, பொது வெளியில் மேடையில் வேறு கலைஞர்களை அவமதித்தார். தான் கலந்து கொண்ட நிகழ்வில் விசிலடித்த இரசிகர்களை ஏசினார் என அவர் மீது விமர்சனங்கள் வைக்கப்பட்டாலும் அவரின் இசைத் தகுதி பற்றி அவரின் தனிப்பெரும் இசை ஆளுமை பற்றி பெரிய இசை ஜாம்ப வான்கள் மட்டுமல்ல சாமானியர்களும் கூட எதுவித விமர்சனங்களும் வைப்பதில்லை என்பது கவனத்திற்குரியது. இளையராஜா தமிழருக்கு ஏன் மொழி கடந்த உலக இசை இரசிகர்களுக்கு ஆற்றிய இசைச் சேவையுடன் ஒப்பிடும் போது அவர் பற்றி முன்வைக்கப்படும் அவதூறுகளும் குற்றச்சாட்டுகளும் புறக்கணிக்கத் தக்கவையே. அவரின் அசாத்திய சாதனைகளை மதிக்க மனமற்ற, ஏற்றுக் கொள்ளத் தயங்குகிற, தம்மால் இப்படி இயலவில்லையே இவரால் சாதிக்க முடிகிறதே என எண்ணும் சிலரின் காழ்ப்புணர்வாக, வக்கிரங்களாக, புறுபுறுப்புகளாகவே அவையும் அடிபட்டுப் போகின்றன.

இளையராஜாவின் இசையும், அவர் தனது இசையில் செய்த புதுமைகளும் பரிசோதனைகளும், பழைய மரபுகளை பாரம்பரியங் களை தனது இசையில் மீள் உருவாக்கத்திற்கு உட்படுத்தியதும், இசைவடிவங்களை ஒன்றுடன் ஒன்று எவ்வித சங்கடங்களோ உறுத்தல்களோ இன்றி கலந்ததும், வழக்கங்களை மாற்றியதும், இன்றும் வியப்புக்களையும் ஆச்சரியங்களையும் உருவாக்குபவை. இன்றைய தலைமுறையினருக்கும் இனி வரும் தலைமுறைகளுக்கும் பாடங்களாக அமைபவை.

ராஜாவின் இவ்இசை ஆளுமைக்கு அவரின் இயல்பான அளவு கடந்த இசைஞானம், கர்நாடக இந்துஸ்தானி மேற்கத்திய செவ்வியல் மற்றும் நவீன இசையில் அவர் தேடிக் கற்றுப் பெற்றுக் கொண்ட புலமை, நாட்டுப்புற இசையில் கொண்ட அவரது இரத்தத்தில் ஊறிய பரிச்சயம், வாத்தியங்களை எப்படி எங்கே எவ்வாறு பாவிப்பது என்ற கறாரான தெளிவு, எந்தச் சூழலுக்கு என்ன வாத்தியம் யாரைப் பாட வைப்பது என்பவை தொடர்பாக கண நேரத்தில் எடுக்கும் ஏறக்குறைய மாற்றுக் கருத்துகள் அற்ற சரியான தனித்துவ முடிவு என்பனவும் காரணங்களாகும் எனலாம்.

அண்மையில் ஒரு காணொளியில் "காக்கா முட்டை" என்ற படத்தின் இயக்குநர் மணிகண்டன் தனது இரண்டாவது படமான "குற்றமே தண்டனை" யை ஒளிப்பதிவு செய்து அதனை Dupping செய்யாமல் இளையராஜாவிடம் காட்டி பின்னணி இசையை அமைக்குமாறு கோரியிருந்திருக்கிறார். அப்போது ராஜா இதன் Dupping ஐ முடித்துவிட்டு வாருங்கள் அப்போது தான் யார் என்ன கதைக்கிறார்கள் என்பதற்கேற்ப என்ன இசைக்கருவிகளை பின்னணி இசைக்கு தீர்மானிப்பது என்பதை தான் முடிவுசெய்ய முடியும் எனக் கூறியிருக்கிறார். இது தான் ராஜாவின் தனித்துவம். இன்றும் அவரது இசை உயிர்ப்போடு நிலைத்துக் காலம் கடந்து இக்கணத்திலும் கேட்போரின் உணர்வோடு ஒட்ட நிற்பதற்குமான காரணம்.

இளையராஜா இசையில் ஒரு இசைத்துணுக்கையோ ஒரு வரியையோ கேட்டாலே இது ராஜாவின் இசை என சொல்லிவிட முடியும் என S.P.பாலசுப்பிரமணியம் போன்ற பலர் கூறியிருக் கிறார்கள். அதற்கு காரணங்களில் ஒன்றாக அவரது வாத்தியங்களை தனித்துவமாக ஒழுங்கமைத்துப் பாவிக்கும் அசாத்தியத் திறமையை கூறலாம். அவரின் இசையில் ஒரு வாத்தியம் முன்பு கேட்காத ஒலியை தருவதை கேட்டிருக்கின்றோம் எனவும் அவரின் சொற்கேட்டு

ஒவ்வொரு வாத்தியமும் ஒவ்வொரு வாத்தியக்காரரும் தேவதைகள் போல அவருக்கு சேவகம் செய்திருப்பதாகவும் பல விமர்சகர்கள் கூறிச் சிலாகிப்பதுண்டு.

இன்று அவரின் பல்லாயிரம் பாடல்களை கேட்கும் போதும் அக்காலத்தில் உள்ள குறைவான வசதி வாய்ப்புக்குள் இன்றும் மீள இசைக்கும் போதும் பெரும் சவாலைத் தருகின்ற சிக்கலான இசைக் குறிப்புக்களைக் கொண்ட இப்பாடல்களை ஏதோ ஒரு வேகத்தில் இசைத்தது எப்படிச் சாத்தியமானது என அவருடன் பணியாற்றிய பல பெருங்கலைஞர்கள் வியப்புத் தெரிவித்திருப்பதையும் பார்க் கின்றோம்.

இந்த இடத்தில் ஆச்சரியமான விடயம் என்னவென்றால் இவ்வாறு எல்லா இசைக் கருவிகளையும் தனித்துத் தெரியும் படியும் தனித்துவமாகவும் சிறப்பாகவும் ஒருங்கமைத்து, காலத்தால் அழியாத ஆயிரம் ஆயிரம் மெட்டுக்களை சில நிமிடங்களில் உருவாக்கி மெருகிட்டு, எண்ணற்ற பாடகர்களை பொருத்தம் கருதி தெரிவுசெய்து, அவற்றை எல்லாம் தனியொருவராக தனது இசைக் குழுவினரை வழிநடத்தி உலகுக்கு ராஜா தந்திருக்கிறார் என்பதே.

“சின்னத்தம்பி” படப் பாடல்கள் அனைத்தும் 20 நிமிடங் களில் மெட்டமைக்கப்பட்டன, அனேகமான படங்களிலும் பாடல்கள் உருவானதும் அவ்வாறே. அனேகமான படங்களின் பின்னணி இசைக்கோர்ப்பு 3,4 நாட்களில் நிறைவு பெறும். வெளி நாடுகளில் போல தனித்தனி இசை நடத்துநர்கள் ராஜாவிடம் பணி யாற்றுவதில்லை. இவை வேறெங்கும் நடக்காத அதிசயம். இதிலுள்ள பேராச்சரியம் என்னவென்றால் தினமும் காலை 7.00 இருந்து 1.00 மணி பிற்பகல் 2.00 மணியிலிருந்து 8.00 மணி என்ற இரு நேர அட்டவணையில் தினமும் இரண்டு பாடல்களை இயக்குநர் சொல்லும் situaton க்கு ஏற்ப மெட்டமைத்து, இசைக்கருவிகளை தயார் செய்து, பாடலாசிரியர்களை தெரிந்து பாடல் எழுத வைத்து, பாடகரைத் தேர்வுசெய்து, பாடிப் பழகவைத்து இசைக்கருவிகளோடு ஒத்திகை பார்த்து, பல சந்தர்ப்பங்களில் தானே பாடல்களை எழுதி பாடி, இன்று போல ஒலிப்பதிவு வசதிகள் அற்ற அன்று ஒரு பிழை என்றாலும் தொடக்கத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டிய live recording இல் துல்லியமாக பதிந்து தந்திருக்கிறார் ராஜா. இதே நேரத்தில் பின்னணி இசைக்கோர்ப்பு வேறு. ஒரே நேரத்தில் வெவ்வேறு மொழி, கதைக்களம் உள்ள நான்கு படங்களுக்கு நான்கு ஒலிப்பதிவு கூடங்

களில் நான்கு இசைக்குழுக்களைக் கொண்டு இசைகோர்த்த சம்பவங் களும் நடந்துள்ளன. அனேகமாக எல்லாப் பாட்டுகளுக்குமான ஒத்திகையின் பின் பாடல் பதிவின் போது பொதுவாக ராஜா அங்கிருப்பதில்லை என்பதும் ஆனால் அவரின் கற்பனை இம்மியும் பிசகாது பாட்டு உருவாகியிருக்கும் என்பதும், பெரும் வியப்பை ஏற்படுத்தும் விடயமாகும். இவற்றால் தான் அமரர் S.P. பால சுப்பிரமணியம், ராஜா ஒரு self made muscision அதாவது தானே தன்னை கட்டமைத்துக்கொண்ட இசையமைப்பாளன் என்று கூறியிருக்கிறார் போல.

ராஜாவின் இசையில் வயலின், வியாலோ, கிற்றார் போன்ற நரம்புக் கருவிகள் தனித்துத் தெரிவது போல தாளவாத்தியக் கருவி களான தபேலா, டோலக், மிருதங்கம், கெஞ்சிரா ஆகியன கேட்கப் புதுமையாக அமைவதும் காற்றுக் கருவிகளாகிய புல்லாங்குழல், கிளாரிநெட், ஷெனாய் போன்றவை அசாத்திய இசையைத் தருவதும். மேலும், பியானோ, கீ போர்ட் இன் பாணியும் கோரஸ் போன்றவை யும் வேறு இசையமைப்பாளர்களிலிருந்து தனித்து தெரிவதையும் உணர்கின்றோம். “சின்னத்தம்பி பெரியதம்பி” என்ற படத்திற்கு இசை கங்கை அமரன் என்றே போடப்பட்டு இருக்கிறது. எனினும் அதில் இடம்பெறும் “ஒரு காதல் என்பது உன்...” என்ற பாட்டு தனித்து தெரியும். அதன் காரணத்தை ஆராய்ந்து பார்த்தபோது அதற்கு இசை இளையராஜா என்பது தெரியவந்தது. இதனை கங்கை அமரனே நானும் அதே பாடகர்கள், கலைஞர்களுடன் பணிபுரிகிறேன் ஆனால் ராஜா கையைவைத்தால் அது ஒலி நயத்தில் வேறுவிதமாகிவிடுகிறது என ஏற்றுக் கொள்வதைக் கூறலாம்.


மரபாக இவ்வாத்தியத்தை இச்சூழலுக்கு இப்படிப் பாவிக்க வேண்டும் என்ற சட்டகத்தை உடைத்ததாக பல சந்தர்ப்பத்தில் ராஜாவின் இசை ஒலித்து இருக்கும். ஆனால் அதில் எந்த அபசுரமோ பிசிறோ ஏற்பட்டிருக்காது. அடிப்படையிலேயே வேறுபாடுகளைக் கொண்ட மேற்கத்திய இசையும் கர்நாடக இசையும் கூட ஒரு பரிவுடன் ஒத்து ஒலிக்கும். கேட்டால் வேறுபாடே தெரியாது. ஷெனாய் வாத்திய மேதையும் ராஜாவின் இசைக்குழுவில் நிரந்தர இடம் பிடித்தவருமான பண்டிட் பாலேஷ், ஷெனாய் ஒரு சோக நிகழ்வில் பாவிக்கும் வாத்தியமாகவே காலகாலமாக பாவிக்கப்பட்டு வந்தது அதை ராஜா தனது இசையில் முழுமையாக சினிமாவில் பல மங்கள நிகழ்வுகளுக்கு கூட மிகப் பொருத்தமாக பாவித்து தன்னை

வியக்க வைத்தார் என கூறியிருக்கிறார்.

வெவ்வேறு கருவிகள் தனித்துவமாக வெளிப்பட்டது போல ராஜாவின் இசையில் கிற்றார் தமிழ் சினிமாவில் புதிய பரிமாணத்தை முழுமையாகப் பெற்றுக் கொண்டது என்றால் மிகையாகாது. அது போல ராஜாவின் பின்னணி இசையிலும் பாடல்களிலும் பிரத்தியோக கிற்றார் இசையின் பிரயோகங்கள் இன்று வரை பலருக்குப் பாடங்களாக மாறியிருக்கின்றன எனலாம். இதற்கு ஆதாரமாக London trinty college இல் கிற்றாரில் 8ம் தரத்தில் Gold medalist ஆன ராஜாவின் அறிவாற்றல் விளங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இளையராஜாவின் இசை அணியின் மூலவர்களில் மூலவேர் களில் ஒருவராக விளங்குபவரும், பழம்பெரும் இசையமைப்பாளர் சுதர்சனம் அவர்களின் மகனுமான சதானந்தன் (சதா) ராஜாவிடம் பிரதான Lead Guitarist ஆக இன்று வரை செயற்படுபவர். இதுவரை ராஜாவின் இசையில் வெளிவந்த சகல பாடல்களிலும் பின்னணி இசைகளிலும் அவரது Lead guitar ஒலிக்காத சந்தர்ப்பங்களே இல்லை எனலாம். மிகப்பெரும் திறமைவாய்ந்த கலைஞரான அவர் தனது இசை ஆளுமைக்கு முழுக்காரணமும் ராஜாவே எனச் சொல்லிப் பணிகிறார்.

“தென்றல் வந்து என்னைத் தொடும்”, “ஆகாய வெண்ணி லாவே” “என் இனிய பொன் நிலாவே” “பொன்மானே சங்கீதம் பாடவா” “துள்ளி எழுந்தது பாட்டு” போன்றவை உள்ளிட்ட எண்ணற்ற பாடல்களின் ஆரம்ப, இடையிசைகள் அவரின் திறமையையும் அவரை தெளிவாக துல்லியமாக வாசிக்க வைத்த ராஜாவின் ஆற்றலையும் பறைசாற்றுகின்றன. அவரைப்போல் ராஜாவின் ஆரம்ப காலத்தில் பல பாடல்களுக்கு Lead Guitar வாசித்தவர் ராஜாவின் ட்ரம்மர்களில் ஒருவராகவும் இசை நடத்துநராகவும் நீண்டகாலமாக விளங்கி அண்மையில் அமரரான புருஷோத்தமனின் சகோதரரான சந்திரசேகர் ரங்கநாதன் ஆவார். இவர் தான் “இளைய நிலா பொழிகிறதே” என்ற பாடலுக்கு பிரதானமாக வாசித்தவர். இன்றளவில் அந்தப் பாடலின் Lead Guitar வாசிப்பு முறை இளையவர் களுக்கு பெரும் சவாலாக அமைவதுவும் எல்லோராலும் சிலாகிக்கப் படுவதும் யாவரும் அறிந்ததே. அப்பாடலின் இரண்டாம் இடை யிசைக்காக சுமார் பத்து வித Lead Guitar குறிப்புகளை ராஜா வழங்கிய தாகவும் பத்தாவதே தற்போது பாடலில் இடம்பெற்றிருப்பது என்றும் அறிய முடிந்தது. இவர்கள் இருவரை விட பாடகர் சாய்



பாபா, கங்கை அமரன், பாபு போன்றோரும் Lead Guitar கலைஞர்களாக ராஜாவுடன் பயணித்திருக்கிறார்கள்.

மேலும் Lead Guitar ஐ போல விசேடமாக Bass guitar இன் பயன் பாடு ராஜாவினால் தான் தமிழ் சினிமா இசையில் மேலோங்கியது என்றால் மிகையில்லை. 70 களில் ஹிந்திப் பாடல்களில் அதிகளவிலும் தமிழ்ப் பாடல்களில் ஓரளவிலுமே Bass guitar இன் துடிப்பதிர்வு பயன்பட்டது. அக்காலத்தில் club dance பாடல்களிலும், வேகமான தாள கதி பாடல்களிலுமே பத்தோடு பதினொன்றாகப் பாவிக்கப் பட்ட Bass guitar ராஜாவின் வருகையின் பின் அவரின் சகல விதமான பாடல்களிலும் (கிராமியப் பாடல்கள், பக்திப் பாடல்களில் கூட) பாவிக்கப்பட்டு அப்பாடல்களின் பரிமாணத்தை தூக்கி வேறு எல்லைக்கு கொண்டு செல்ல வைத்தது. Bass guitar தனித்த ஒரு வாத்தியமாக, ஏனைய வாத்தியங்களுக்கு நிகராக, ராஜாவின் பாடல்களில் தவிர்க்க முடியாத, ராஜாவின் தனி முத்திரையாக, விளங்கியது. ஒவ்வொரு பாடலுக்கும் ஏற்ப Bass guitar ல் ராஜா அமைத்த இசைக் கோலங்கள் (patterns) அலாதியானவை.

ஆரம்பத்தில் வசந்த் என்பவர் ராஜாவின் பிரதானமான Bass guitar கலைஞராக விளங்கினார். அவரைத் தவிர அன்ட்ரு, ராஜாவின் பிரதானமான key board கலைஞர் விஜி மனுவல் போன்றோரும் இக்கருவியை இடைக்கிடை வாசித்திருக்கிறார்கள். எனினும் பிற்காலத்தில் 1979 களில் "பிரியா" படத்தில் இருந்து ராஜாவின் சகல பாடல்களுக்கும் பிரதானமாக Bass guitar கலைஞராக விளங்கியவர் ராஜாவின் மனைவியின் சகோதரரான சசிதரன் அவர்களாவார். இவ் இசைக்கருவியில் எந்தவித பரிச்சயமும் இன்றி தானாக முயன்று அதனை வாசிக்கப் பழகி பிற்காலத்தில் Bass guitar ல் master என்று சொல்லத்தக்க நிலைக்கு உயர்ந்தவர் சசிதரன் அவர்கள். அவர் தனது

பிறந்த தினத்தன்றே அண்மையில் இறையடி சேர்ந்தது இசைத் துறைக்கு பேரிழப்பாகும்.

ராஜாவின் பாடல்களில் Bass guitar எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறது என்பதற்கு அண்மையில் இசை அன்பர் ஒருவர் பகிர்ந் திருந்த காணொளி ஒன்றைப் பற்றி கூறலாம் என எண்ணுகிறேன். அவர் ராஜாவின் “புதிய பூவிது பூத்தது” (1985ல் வெளிவந்தது) பாடலை முழுமையாகவும் Bass guitar ஐ மட்டும் முழுமையாக நீக்கி விட்டும் ஒப்பிட்டிருந்தார். அவற்றைக் கேட்டபோது Bass guitar இன் முக்கியத்துவமும் அதன் உயிர்த்துடிப்பும் புலனாகியது.

“பொன் வானம் பன்னீர் தூவுது....”
“ தங்கச் சங்கிலி மின்னும்...”
“ கல்யாணச் சேலை உனதாகும்...”
“சின்ன சின்ன வண்ணக்குயில்...”
“மானாட கொடி பூவாடும் ஒரு சோலை....”
“அப்பப்பா தித்திக்கும் உந்தன் முத்தம்...”
“சின்னப் பூ சின்னப்பூ...”
“புதிய பூவிது பூத்தது...”
“காதல் ஓவியம் பாடும் காவியம்...”
“கொடியிலே மல்லிகைப் பூ...”
“வானிலே தேனிலா ஆடுதே....”
“என்னுள்ளில் எங்கோ ஏங்கும்...”
“பொட்டு வைத்த ஒரு வட்ட நிலா....”
“மேகம் கொட்டட்டும்...”

போன்ற பல பாடல்களில் Bass guitar இன் முக்கியத்துவத்தையும் அதன் உயிர்த்துடிப்பையும் ஆதிக்கத்தையும் Bass guitar இல் ராஜா அமைத்த வெவ்வேறு இசைக் கோலங்களையும் (patterns) கேட்கலாம். Bass guitar ஐ “அம்மன் புகழைப் பாட எனக்கு” என்ற பக்திப் பாடலில் அனாயாசமாகவும் பொருத்தமாகவும் பாவித்திருப்பது அவரின் அபரிமிதமான கற்பனா சக்தி மற்றும் தயங்காத புதிய பரிசோதனை முயற்சிக்கு சான்றாக அமைகிறது. பல கிராமிய மணம் கமழும் பாரம்பரிய இசைக்கருவிகளை கூடியளவில் பாவித்த பாடல்களிலும் Bass guitar ஐ கலந்திருக்கிறார் ராஜா.

ஒரு தடவை S.P.B அவர்கள் Bass guitar என்ற instrument க்கு தனித்துவம் மரியாதை கொண்டு வந்தது இளையராஜா தான் என்றும்.

மற்ற இசைக்கருவிகளுடன் ஒப்பிடும் போது இது Double bass ற்கு பின் வந்த Electrical instrument. Rhytham pattern ல் எவராவது card ஒழுங்கை சொல்லிக் கொடுத்தால் வாசித்து விட்டுப் போவார்கள். ஆனால் இளையராஜா அதற்கும் அதை என்ன pattern ல் வாசிப்பது என தனியே notes எழுதிக் கொடுப்பார். அதை ஒரு தனித்துவமான இசைக்கருவி யாகவே அவர் பாவித்தார் என்றும் சிலாகித்திருக்கிறார்.

ராஜாவால் Bass guitar க்கு கொடுக்கப்பட்ட முக்கியத்து வத்தைத் தொடர்ந்து பின்னர் வந்த இசையமைப்பாளர்கள் Bass guitar தமது இசையில் தவறாது சேர்த்துக் கொண்டனர். அதன் பெறுமதியை உணர்ந்து தமிழகத்தில் சுமார் ஆயிரம் Bass guitar கலைஞர்கள் தற்போது வாசித்து வருகிறார்கள் என்று தனது பேட்டியொன்றில் நெகிழ்கிறார் சசிதரன் அவர்கள்.

மேலும் பாடல்களின் இடையிசையிலும் பின்னணி இசையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட Lead Guitar களையும் Bass guitar களையும் ஒரே வேளையில் இசைக்கும் பாணி ஒன்றும் ராஜாவினால் அறிமுகப் படுத்தப்பட்டது..

" சிறு பொன்மணி அசையும்...." பாடலின் இரண்டாம் இடைஇசை

"ஆனந்தத் தேன் காற்று தாலாட்டுதே..." பாடலின் இரண்டாம் இடைஇசை

"ராதா ராதா நீ எங்கே...." பாடலின் இரண்டாம் இடைஇசை என்பவற்றில் இப்புதுமையை கேட்கலாம்.

சுமார் ஆறாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்கள், ஆயிரத்திற்கு மேற்பட்ட படங்களின் பின்னணி இசை என்ற கரைகளற்ற இசைஞானி இளையராஜாவின் இன்னிசைப் பாற்கடலில் பயன்படுத்தப் பட்ட புதுமைமிக்க guitar இசைக்கருவியின் பரிணாமத்தைச் சிறு பதிவாக கூற முனைவது அக்கடலை நக்க முயன்ற பூனையின் முயற்சியாகவே அமையும். நான் இங்கே சுவைத்துத் தந்தவை சில பதச்சோறுகளே.

இதயத் துடிப்பில் "லப்-டப்" என இரு ஓசைகள் இருக்கின்றன. என்னைப் பொறுத்தவரை இசைஞானி இளையராஜாவின் உயிர்ப்பு மிக்க, சாகா வரம்பெற்ற, பேரிசை என்ற உடலை இயக்க இருக்கும் எண்ணற்ற இசைக்கருவிகள், பாடகர்களின் குரல்கள், என்ற அங்கங் களில் இதயமாக விளங்குவது guitar எனும் இசைக் கருவியே என்பேன். அதன் துடிப்பில் lead guitar இன் ஒலி "லப்" ஆகவும் bass guitar இன் ஒலி "டப்" என ஆகவும் இருக்கிறது என்றால் மிகையில்லை..

# இளையராஜாவின் இசையில் நாதஸ்வரம்



இசை பற்றிய வரலாற்று பாரம்பரியத்தில் ஒவ்வொரு இசை வாத்தியக் கருவியும் தத்தம் சுரங் களின் ஓசைகளின் தனித்தன்மை வாய்ந்தவை யாகும். ஒவ்வொரு இசைக்கருவியில் இருந்தும் இசை பிறக்கின்ற பொழுது, இசை நுகர்வோனது இன்பத்தினையும் தாண்டி ஆத்மார்த்தமான திருப்தியை ஏற்படுத்துகின்றது. இசை வாத்தியங் களின் இசைச் சமனிலையே பாடல்களையும், பின்னணி இசைகளையும் நுகரும் தரத்திற்கு எடுத்துச் செல்கின்றது. இருந்த பொழுதிலும் சில இசைக்கருவிகள் திறந்த வெளி இசைகளில் செவிக்கு மிக ரம்மியமாக அமைந்து விடுகின்றன.

இந்த வகையறாக்களில் தமிழர் பாரம்பரி யத்தோடு இரண்டறக் கலந்து நாதஸ்வரம் ஒரு மங்கல வாத்தியமாக காணப்படுகின்றது. நாகர் இனத்தினால் வாசிக்கப்பட்ட மிகப் பழமை வாய்ந்த ஒரு துளைக்கருவி என்னும் பெருமையை

யும் பெற்றுக் கொள்கின்றது. தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பொது நன்நிகழ்வுகள் எல்லாவற்றிலும் இசைக்கப்படுகின்றது. கோயில்கள், திருமண நிகழ்வுகள், பூப்புனித நீராட்டு விழாக்கள், வரவேற்பு நிகழ்வுகள், சமய சார்பான நிகழ்வுகள் என நாதஸ்வரம் தமிழர் வாழ்வின் பாரம்பரியத்தில் பிரிக்க முடியாத ஒரு இணை இசைக் கூறாக உள்ளது என்றால் மிகையாகாது.

தமிழர் பாரம்பரியத்தில் கிராமியப் பண்பாட்டோடு நாதஸ்வரம் பின்னிப்பிணைந்து கிடக்கின்றது. கிராமிய பண்பாட்டி யல் கோலங்களில் நாதஸ்வரம் இன்றி கிராமிய நிகழ்ச்சிகள் இல்லை என்கின்ற அளவுக்கு நாதஸ்வரம் தனக்கென தனியிடத்தினை பிடித் திருக்கின்றது. இசைப் பேழைகள், ஒலி நாடாக்கள், இறுவட்டுக்கள், பாடல் இசைக் கச்சேரிகள் என்பவற்றில் பாடல்களை கேட்டுக் கொண்டிருக்கிற பொழுதும் நாதஸ்வர இசைக் கச்சேரிக்கு என்றே ஒரு சுவைஞர் கூட்டம் இன்றளவும் இருந்து கொண்டே இருக்கின்றது.

நாதஸ்வர இசை தனித்து வெளித்தெரிகின்ற பொழுதும் அது தவில், மிருதங்கம் என்பவற்றுடன் இணைந்து இசைக்கின்ற பொழுதே சுவைஞர்களின் முழு லயிப்பினையும் தன்பால் ஈர்த்துக் கொள்கின்றது. எனினும் திரையிசைப் பாடல்களில் சிற்சில இடங்களில் தனித்தும், இணைந்தும் இசைக்கின்ற பொழுதில் இரு வேறுபட்ட சுவையுணர்வு கள் தொற்றிக் கொள்வதனை இயல்பாகவே உணர முடிகின்றது.

இவ்வாறான இசைப்பாரம்பரியம் கொண்ட நாதஸ்வர இசை யினை இசை ஜாம்பவான் ராகதேவன் இளையராஜா அவர்கள் தனது பாடல்களிலும் பின்னணி இசைகளிலும் மிகவும் லாவகமாக கேட் போரை மெய்ம் மறக்கக் கூடிய வகையில் இசைத்திருப்பார். ஏனைய இசைகளை மீறி நாதஸ்வரம் ஒலிக்கின்ற பொழுதிலும் தனக்கேயுரித் தான இசை ஞானத்தாலும் யுக்தியாலும் பாடல்களின் ஆரம்ப இசை யாகவும், இடையிசையாகவும் இணைந்து ஒலிக்கின்ற இசையாகவும், தனித்து ஒலிக்கின்ற இசையாகவும் முடிவு இசையாகவும் பின்னணி இசையாகவும் மிகவும் நுண்மையாக இசை சுவைஞர்களை கிறங்கடிக் கும் வகையில் இசை ஞானிக்கே உரித்தான ஒன்று. “நாதஸ்வரம் எமது நாட்டுக்கே உரித்தான ஒன்று; அதைப் போல ஒரு வாத்தியம் உல கெங்கும் கிடையாது. அது எம் பண்பாட்டின் சின்னம். அதை வெறும் இசைக்கருவி என்று மட்டும் எண்ணி விடாதீர்கள்; நாதஸ்வரம் ஒரு சிவ சொத்து” என இளையராஜா அவர்களே விதந்துரைத்துள்ளார்.

நாட்டுப்புற இசையினை மேலைத்தேசச் செவ்வியல் இசையோடு கலந்து புதுமையான முறையிலே பரிசோதனைகளை

நிகழ்த்திய இளையராஜாவின் சாதனைகள் ஆச்சரியமானவை. "ஏறு மயில் ஏறி விளையாடு" என்ற அருணகிரிநாதரின் சந்தத்தினை அடி யொற்றி கௌரி மனோகரி ராகத்திலே "மாங்குயிலே பூங் குயிலே" (கரகாட்டக்காரன்) என்ற பாடலை இசையமைத்துள்ளார். ஆரம்ப இசையாகவும் இடை இசையாகவும் நாதஸ்வரத்தினைக் கையாண்டு கரகாட்டத்தின் தாள அசைவுகள் குலையாமலும் மென்மையான காதல் உணர்வினை திறந்த வெளி அரங்கில் மிக உற்சாக மாகக் காட்டி இசைகோர்த்துள்ளார். அதே போன்றே நாட்டுப் புறப் பாடலாக அமைந்த "ஒத்த ரூபா தாரேன்" பாடலிலும் ஆரம்ப இசை யாகவும், இடையிசையாகவும் நாதஸ்வரம் அமைந்து கேட்போரைக் கிறங்கடிக்கிறது. நடன அசைவோடும் தவிலிசை யோடும் இணைந்து மனதிலே கிளர்ச்சியினை உண்டாக்கி விடுகின்றது.

நாட்டாரியல் வழக்கில் அரிசி குத்துதல், அம்மியரைத்தல் போன்ற செயற்பாடுகளின் போதெல்லாம் உற்சாகத்திற்காகப் பாடல் களை வெளிப்படுத்துவார்கள். மண் வாசனை திரைப்படத்தில் கிராமியப்பாடலுக்கான பண்பின் செல்நெறியை வெளிப்படுத்த "அரிசி குத்தும் அக்கா மகளே" எனும் பாடலின் ஆரம்ப இசையாக நாதஸ்வரத்தினை ஒலிக்கச் செய்துள்ளார். வேப்பிலை நடனக் காட்சியோடு பொருந்திப் போய் நம்மை ஈர்த்து காதலர்களின் குறும்புச் செயல்களுக்கு ஆற்றுப்படுத்துவதாகத் தொடக்கத்திலே ஒலிக்கின்ற நாதஸ்வர நாதம் அமைகின்றது. அதே திரைப்படத்தில் ஹிந்தோள ராகத்தில் அமைகின்ற "பொத்தி வச்ச மல்லிகை மொட்டு" பாடலில் திருமணக் கனவின் இசைக்குறியீடாக நாதஸ்வரத்தினைக் கையாள்வ தும் குறிப்பிடத்தக்கது. தோரணங்களின் நடுவில் நாயகனும் நாயகியும் நடந்து செல்லும்போது நயமாக நாயனத்தினை ஒலிக்கச் செய்து அக்காட்சியினை அற்புதமான கலானுபவமாக்கி விடுகின்றார்.

நாதஸ்வர இசையின் மேன்மையை வெளிப்படுத்திய திரைப்படங்களில் "கோயில் புறா" மிக முக்கியமானது. Title Card முழுமையும் நாதஸ்வர இசையால் மட்டுமே நிரம்பித் ததும்புகிறது. திரைப்படத்தில் இசைஞானியின் குறிப்புகளுக்கு சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்களின் நாதப்புனல் காட்டாறாகப் பாய்ந்துள்ளது. "வேதம் நீ இனிய நாதம் நீ "பாடலை நாதஸ்வரத்திலே வாசிக்க நாயகியோடு இணைந்து நாமும் தடுமாறுகின்றோம்.


ஆச்சா மரத்தில் உருவாகி மனித மூச்சால் நாதத்தினை வெளிப்படுத்தும் நாதஸ்வரமானது ஏனைய இசைக்கருவிகளை மீறி ஒலிக்கின்ற பண்பினைக் கொண்டது. மாயாமாளவகௌளை

*ராகத்திலே அமைந்த “பூங்கதவே தாழ் திறவாய்” (நிழல்கள்) பாடலில் நாயகனும் நாயகியும் பாடி மகிழ்கின்ற வேளையில், பிறிதொரு நாயகனின் உள் நுழைவு கவனக் குவிப்போடு அமைய வேண்டுமென்பதற்காக நாதஸ்வரத்தினையே இளையராஜா கையாள்கிறார். இக்காட்சியும் திருமணக் கனவினையே வெளிப்படுத்துகிறது. அண்ணனை விட்டு ஒரு கல்யாணமா (வாத்தியார் வீட்டுப்பிள்ளை) பாடலிலும் திருமண நிகழ்வின் நினைவுபடுத்தலுக்கு நாதஸ்வர ஓசை கையாளப்படுவது குறிப்பிடத்தக்கது.*

*குறும்புத்தனங்கள், காதலர்களின் சேஷ்டைகள், வீர பிரதாப உணர்வுகள் என்பவற்றினையும் நாதஸ்வரத்தின் வழியே அழகாகக் கடத்தி விடுவதில் இளையராஜா வல்லவராகவே உள்ளார். சந்தைக் கடை செல்லாயி(நினைவே ஒரு சங்கீதம்) பாடலில் காதலர் சேஷ்டையினை நாதஸ்வர இசையினால் கட்டமைத்து பாடலின் வீரியத்தினை உயர்த்தியுள்ளார். என்னைப் பாடச் சொல்லாதே(ஆண்பாவம்) பாடலிலும் குறும்புத் தனத்தினை வெளிப்படுத்துகிறார். சிறுவர்களின் குறும்பினை இசைவழியே ஒழுகச் செய்ய இளையராஜா நாதஸ்வரத்தினை தேர்ந்துள்ளார். சுயத்தின் திமிரையும், வீரப் பிரதாபங்களையும் வெளிப்படுத்தும் நாயக விம்ப எழுச்சி பாடல்களில் கூட கிராமிய அடையாளத்திற்காக நாதஸ்வரத்தினைக் கையாண்டுள்ளார். இராமன் ஆண்டாலும் (முள்ளும் மலரும்) பொதுவாக என் மனசு (முரட்டுக்காளை) போன்றன இவ்வகைப் பாடல்களுக்கு தக்க சான்றுகளாகும். தமிழர் தம் பண்டிகையை சுட்டும் இனிமையான மகிழ்வான இசையினை தைப்பொங்கலும் வந்தது (மகாநதி) பாடலில் இனங்காணலாம். இசை நுகர்வோரிடத்தில் துள்ளல் நடையில் அமைந்து தைப் பொங்கல் பண்டிகையை நெஞ்சுக்கு மிக நெருக்கமாக்கி விடும் வகையிலே நாதஸ்வர இசையை அப்பாடலில் ஒலிக்கச் செய்துள்ளார்.*

*மச்சானைப் பார்த்தீங்களா (அன்னக்கிளி) என முதற் படத்திலே தொடங்கிய நாதஸ்வர ஓசை ஆயிரமாவது படமான தாரை தப்பட்டையிலும் “வதன வதன வடிவடிவேலரே” என நீட்சி கொண்டது. தாரை தப்பட்டையில் நாயகன் நாதஸ்வரத்துடன் அறிமுகமாகிறார். அக்காட்சியல் நாதஸ்வரம் கம்பீரமாகவும் ரௌத்திரமாகவும் ஒலிக்கும் தன்மை மொத்தப் படத்தின் சாராம்சத்தையே புலப்படுத்தி விடுகிறது. நாதஸ்வரமானது உள முரண்பாடுகளையும் சரி செய்து மாறுபட்ட உலகினுள் அழைத்துச் செல்கின்ற மந்திரத் தன்மை மிக்கதென்பதை “உன்னால் முடியும் தம்பி” திரைப்படத்தின் பின்னணி இசையிலே உணர்த்தியுள்ளார். நயமான இசைக்குறிப்புகளால் நாதஸ்வரத்திற்கு ஏற்றம் சேர்த்தவர் இசைஞானி என்பதில் யாதொரு ஐயமுமில்லை!*

# இளையராஜாவின் இசையில்
# மிருதங்கம்



**"வீ**ணா வேணு - ம்ருதங்கம் வாத்ய த்ரயம்" என்பதற்கமையவாக தந்தி, காற்று, தோல் வாத்தியங்களில் முதன்மைநிலையிலுள்ள வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் போன்ற உண்மை வாத்தியங்களை உன்னதமாக தன்னிசையிலே வெளிப்படுத்துபவராக இசைஞானி இளையராஜா அமைந்துள்ளார். ஜீவநதி சஞ்சிகையின் முன்னைய இதழ்களில் புல்லாங்குழல், வயலின், வீணை, கிற்றார், நாதஸ்வரம் ஆகிய வாத்தியங்களை இசைஞானி அவர்கள் எவ்வாறு கையாண்டார் என எழுதப்பட்டிருந்ததன் நீட்சியாக மிருதங் கத்தினை என்னளவில் அலச முனைகின்றேன்.

இசைஞானியின் மிருதங்க இசைக்கடலின் சில துளிகளில் நனைந்துள்ளேன். என்னை நனைத்த தாளத் திவலைகளின் நயத்தினை நினைக்கும் தருணத்திலே சிறகு முளைத்து விடு கின்றது. "ஒரு ஓடை நதியாகிறது" படத்திலே

த. பார்த்தீபன்

“தலையைக் குனியும் தாமரையே” பாடலில் நாதஸ்வர இசையுடன் ஆனந்த வாத்தியம் கலக்கிறது. நல்லதொரு மங்கலகரமான தொடக்கத்தின் நீட்சியில் கெட்டிமேளம், ஜலதரங்கம், வயலின் இசையின் நிறைவில் S.P.பாலசுப்ரமணியத்தின் குரலிலே பாடல் இதயத்தை வருடுகிறது. சரணங்களில் துரித சொற்களுக்கு ஏற்ற வகையிலே மிருதங்க இசை தொடர்கிறது. அத்துடன் சரணங்களின் இறுதியில்,

“அமுதம் வழியும் இதழைத் துடைத்து
விடியும் வரையில் விருந்து நடத்து”

என முதலாவது சரணத்திலும்,

“இரண்டு நதிகள் இணைந்து நடக்கும்
புதிய அலைகள் கரையை உடைக்கும்”

என இரண்டாவது சரணத்திலும் சதுஸ்ர நடையை திஸ்ர நடையாக உடைத்து வெளிப்படுத்தும் அழகோ... அழுகுதான்!

“ஆடல் கலையே தேவன் தந்தது” பாடலிலும் விநோத சங்கமத்தினை நிகழ்த்தியுள்ளார். “தத்தித் தாங்கிட தகதரி கிடதக தரிகிடதொம் தொம்த தகிட” எனத் தொடங்குகிறது ஒரு ஜதிக் கோர்வை. ஆனந்த வாத்தியத்தில் இந்த ஜதிக்கோர்வையில் தாம், தீம், தகதரி கிடதக போன்ற காலப்பிரமாணங்களோடு கூடிய பல ஜதிப் பிரயோகங்களைக் காணமுடியும். இக்கோர்வையின் இறுதியில் “தத்தத் தத்தீம் ததீம் ததீம் தரிகிட” என்ற ஆவர்த்தனம் முடிந்ததும் கணீர்க் குரலில் கே.ஜே.ஜேசுதாஸ் தேனை வார்க்கத் தொடங்குகிறார். இப்பாடலில் பல்லவியின் நிறைவில் வரும் இடை இசையிலும், இரண்டாவது சரணத்திலும் வீணை இசையுடன் இணைந்து மிரு தங்கம் நிகழ்த்தும் இசைப்போர் அற்புதமான அனுபவத்தை தரு கின்றது. மேலும் முதலாவது சரணத்தில் “மான்கூட்டம் மயங்கத் தாவித் தாவித்தான்” என்ற வரிகளோடு பொருந்தும் வகையிலே நடன மாது துள்ளித்தாவும் மெய்யுணர்வை மிருதங்க இசைமூலம் கட்டி யெழுப்பிப் படிமப்படுத்தி விடுகிறார். தொடர்கின்ற இரண்டா வது சரணத்தில் சதுஸ்ரநடையில் ஆரம்பித்து கண்டநடை, திஸ்ர நடை என உருமாறி இறுதியில் சதுஸ்ரநடையிலே மிருதங்க தாளத்தில் கதி பேதம் நிகழ்த்தி மகிழ்நெறியின் உச்சத்திற்கு அழைத்துச் செல்கிறார்.

பாரம்பரிய வாத்தியங்கள் மூலம் இசையொளி ஏற்றும் ஞானியின் அதி வெளிச்சத்தினை “சிந்து பைரவி” திரைப்படத்திலும் காணமுடியும். “கலை வாணியே” என்று தொடங்கும் கல்யாணி ராகப் பாடல் ஆதியில் இருந்து அந்தம் வரை ஆரோகண கிரமத்தில் உயர்ந்து

செல்லும் ஸ்வரசஞ்சாரத்திலே அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வமைப்பினை அனுசரித்தாக பல்லவியிலும், சரணத்திலும் காத்திரமான சொற்களை அவாவி நிரப்பியதோடு மட்டுமன்றி, மிருதங்கம், வயலின் போன்ற வாத்தியங்களின் பாவனைகளை தாளத் தோடு அனுசரித்து சதுஸ்ர நடையில் நகர்த்திச் செல்வதும் நயமான தாள இன்பத்தினை நல்குகின்றது. ஒவ்வொரு சரணத்தின் இறுதியும் வார்த்தைக் கோலங்களுக்கு அமைய மிருதங்க இசையோடு பொருத்திப் போவது இசைஞானியின் இசைஞானத்திற்கு மகுடமா யுள்ளது. சாரமதி ராகத்திலே அமைந்த “பாடறியேன் படிப் பறியேன்” என்ற பாடலில் நாட்டாரிசையோடு கர்நாடக பாணியை நுழைத்து மிருதங்கம், வயலின் இசையினை நர்த்தனம் புரிய வைக்கிறார். பாமரரும், படித்தவரும் இரசிக்கும் வகையிலேமென்மை யான சுகானுபவத்தினை வெளிப்படுத்தி மனதைத் தொட்டு நிற்கின்றது. பாடலின் கருத்து - இசை இரண்டையும் சமனாக வெளிக் கொணர்வ தில், அதாவது Balancing Mentality உடன் செயற்படுவதில் அவருக்கு நிகர் அவரே என்பதையும் அவரது பாடல்களில் உணர்த்தி விடுகின்றார்.

வசந்த ராகத்தைப் பிழிந்தெடுத்து “அந்தி மழை பொழிகிறது” பாடலிலே விருந்து வைக்கிறார். வயலின், தபேலா, ஓகன் போன்ற பல வாத்தியங்களை அங்கங்கு சிறியளவில் வெளிப்படுத்தும் அதேநேரம், மிருதங்கத்தின் மீட்டு, சாப்பு ஆகிய இரண்டினதும் சிறிய பங்களிப்புடன் பாடல் முழுவதையும் நகர்த்தும் பாணி அவருக்கே உரித்தாயுள்ளது. சிருங்கார நயம் வெளிப்படும் வகையில் “சாப்பு” ஓசை “ததாம் ததாம்” எனப் பாடல் வரிகளுக்கு உயிரளிக்கும் தாள நடையில் நகர்வது செவிகளுக்குத் தேன் வார்க்கிறது. ஒவ்வொரு வாத்தியத்தையும் தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வடிவங்களில் இசைக்க விட்டு இப்பாடலில் ஆனந்த எல்லையினை அடையச் செய்கிறார்.


“அலைகள் ஓய்வதில்லை” திரைப்படத்திலும் மிருதங்க இசையினை நயமாகக் கையாண்டுள்ளார். “ஆயிரம் தாமரை மொட்டுக்களே”பாடலின் ஆரம்பத்தில் திஸ்ரநடையில் சிறந்ததொரு கோர்வையினை முட்டு எனப்படும் மிருதங்கமூலம் தனித்துவமாக வெளிப்படுத்தியுள்ளார். பாடலின் ஆரம்பத்தை முட்டிலே தொடங்கி ஆரம்ப இசையை வீணையின் நாதத்துடன் தாள வாத்தியத்திற்கு தபேலா, சதங்கை என்பன அணைத்து பல்லவியை முகிழ்க்கும் போது மிருதங்க இசையினை அணைத்தபடி பயணித்து மாறுபட்ட இசைச்

சித்திரமொன்றினை மனதிலே வரைந்து விடுகிறார். அதிலும் இடை இசைக்காக வயலின் வாத்தியத்தில் துரித கதியில் ஒரு இணைப்பு, தொடர்ந்து ஷனாய், புல்லாங்குழல் வாத்தியங்களின் பரவசமான பயணிப்பு; சரணங்கள் முடிய முடிய பல்லவிகளில் மிருதங்க இசை யினைச் சேர்க்கும் அழகினை அனுபவிக்கும் போது அந்த இசை மேதையின் மேன்மை வியக்க வைக்கிறது. இதைப் போலவே சுத்த தன்யாசிராகத்திலமைந்த "விழியில் விழுந்து இதயம் நுழைந்து" பாடலிலும் வரிகள் முடிந்ததும் முழவின் ஓசை! இரு இதயங்கள் பிரியும் தருணம். கரையில் வீசப்பட்ட இரு மீன்கள் அலையுடன் சேர்ந்து மீண்டும் கடலினுள்ளே அழைத்துச் செல்லப்பட்டு இணை வது போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்தக் கூடியதான விறு விறுப்பான நடையில் ஒரு சிறிய புரட்டல் organ bass ஓசை உயர்த்தலுடன் மனதை வருடும் உணர்வுநிலை தடுமாற்ற உணர்விலிருந்து விடுபடும் ஒரு விதமான உணர்வு நிலையை மிருதங்க தாளத்தினூடாக மாறுபட்ட சித்திரமாக இசையால் உருவாக்கித் தருகிறார்.

"டிக் டிக் டிக்" திரைப்படத்தில் "பூமலர்ந்திட நடமிடும்" பாடலிலும் மிருதங்கத்தின் முதன்மைப்படுத்தலைக்காண முடியும். பாடல் ஆரம்பிக்க முன்னர் கொன்னக்கோல் (வாயால் ஜதிக்கோர்வை சொல்லல்) மிருதங்க இசையில் நடனத்திற்கான பண்போடு வெளிப் படுகின்றது. பல்லவி - இடை இசை - சரணங்களின் நடுவே மெரு கூட்டும் நோக்கில் மிருதங்கத்தில் புரட்டற் சொற்கள் சுவை சேர்க்கின்றன. பாயாசத்தில் முந்திரிப்பருப்பும், திரட்சை வற்றலும் போல பாடலின் தாள நடைக்கேற்ப I Love you, I Love you, I Love you எனவரும் இடத்தினை மிருதங்கமும் இணைந்து அழகு செய்வது புதிய சுவை சேர்ப்பாகும்.

மிருதங்க இசையிலே புதிய உடைப்புகளை நிகழ்த்துபவர் இளையராஜா என்பதை இச்சான்றுகள் நிரூபணம் செய்கின்றன. அவரது இசையானது இசை கடந்த புலம் ஒன்றிற்கு இசை வழியே ஆற்றுப்படுத்தித் தாவிக் குதிக்கச் செய்து அங்கேயும் இசையினை நிறைத்து விடுகின்ற புதிரைச் செய்கிறது. மெட்டுக்கு இட்டு நிரப்பிய வெற்று வார்த்தைகளைக் கூட மகிழ் துய்ப்பின் வடிவமாக்கி விடுகிறார். இசைக்கு நிறத்தையும் காட்சிப் படிமத்தையும் சாத்தியப் படுத்துகிறார். நயநீக்கமற்ற இசைக் குறிப்புகளின் நாயகனாக இசைஞானியின் இசைக் குறிப்புகள், உபநினைவுகளாகி ஆன்மிக வாசல்களைத் திறந்து புதிய தரிசனங்களை இனங்காட்டுகின்றன.

# இளையராஜாவின் இசையில் மேளதாளம்



**த**மிழ்த் திரையிசையின் போக்கை எடுத்துக் கொண்டால் ஆரம்பத்தில் பக்தி இலக்கிய மரபில் எழுந்த படைப்புகள், பின்னர் பொதுவுடைமை, திராவிட சிந்தனையின் புத்துணர்வுக்காலம் என்ற ரீதியில் அமைந்த படைப்புகள் என்று அதற்கேற்றாற் போலப் பயணிக்கும் போது, இன்னொரு பக்கம் சமூக, குடும்ப நெறிகளை மையப்படுத்திய படங்களு மாக இணைந்து ஒவ்வொரு காலகட்டத்திலும் தன்னை மாற்றத்துக்கு உட்படுத்துகின்றது. இந்தச் சூழலில் இளையராஜாவின் வரவானது முந்திய தலைமுறை இசையின் கட்டுடைப்பாக மேற்கத் தேயமும், கீழைத்தேயமும் கலந்த ஒரு இசைப் பரிமாணமாக அது தன்னை மாற்றிக் கொள் கின்றது. கிராமியத் தெம்மாங்குப் பாடல்களுக்கு இன்ன இன்ன பண்பாட்டு வாத்தியங்களைத்தான் பாவிக்க வேண்டும் என்ற பண்பினை அது

கானா பிரபா

கட்டுடைப்புச் செய்கிறது.

அது போலக் காட்சிச் சூழலுக்கோ, பாடல் கோப்புக்கோ பயன்படுத்தப்படும் வாத்தியங்களில் கூட முரண்பட்டதொரு பாவனையை அது கைக்கொள்கின்றது. உதாரணத்துக்கு "தேவர் மகன்" படத்தில் வரும் "மணமகளே மண மகளே வாழும் காலம் சூழும் மங்கலமே மங்கலமே" பாட்டு படத்தின் மிக முக்கியதொரு காட்சித் திருப்பத்தின் முனையில் முளை விடும் போது அங்கே பாரம்பரியமான நாதஸ்வர, மேள தாளங்களை விடுத்து ஷெனாய் வாத்தியத்தின் அதீதத்தைக் கலக்க விடுகிறார் இளையராஜா.

ஏன் இப்படியானதொரு முரண்பட்ட பாவனை? குறித்த காட்சி என்பது எதிர்பாராத இன்ப அதிர்ச்சியோடு, சோகம், சந்தோஷம் இரண்டையும் பங்கு போட்டுக் கொள்வது. இங்கே காட்சிச் சூழலைக் கண்ணால் அனுபவிக்க முடியும். ஆனால் உணர்வுகளை எப்படிக் காட்ட? அங்கே தான் இளையராஜாவின் இசைச் சாயம் காட்சித் திறனுக்கேற்பத் தன்னை வெளிப்படுத்தி ஷெனாய் வாசிப்பின் வழியே அந்த உணர்வைப் பார்வையாளனுக்குக் கடத்துகிறது. இப்படியாக இளையராஜா காலத்து இசை மரபில் இந்தக் கட்டுரையின் மையமாக அமைந்திருக்கும் தவில், மேளம், உறுமி ஆகிய வற்றின் பயன்பாட்டைப் பார்ப்போம்.

திருமண, கோயில் திருவிழாவுகேற்ப அமைந்த நாகசுர, மேள, தாள இசை என்பது ஒரு பக்கம் தன் பண்பாட்டுப் பரிமாணத்தைக் காட்டி நிற்க, மறுமுனையில் கிராமியக் கலைகளுக்கான பக்க வாத்தியப் பயன்பாட்டில் இவற்றோடு மேலதிக தாள வாத்தியங் களான உறுமி, உடுக்கை போன்றனவும் சேர்ந்து கொள்ள இவை இரண்டினது பயன்பாட்டின் நோக்கமும் வேறு பட்டும், தனித்தும் நிற்கின்றது. இதை இன்னும் அழகான ஒப்பீட்டில் பார்த்தால் தில்லானா மோகனாம்பாள் படத்தில் அடி நாதமாக இயங்கும் நாகசுர, மேள இசையையும், கரகாட்டக்காரன் படத்தில் அமைந்த இதே வாத்தியங்களின் பாவனையும் வெவ்வேறு பரிமாணங்களில் அமைந்து நிற்பதைக் காண முடியும்.

இளையராஜாவைப் பொறுத்தவரை மேற்கத்தேய இசை தழுவிய பாடல்களாகட்டும், கிராமியத் தெம்மாங்குப் பாடல்களா கட்டும் இரண்டிலுமே சாதித்துக் காட்டியவராயினும் அவரது பின்புலம் கிராமியக் கலைகளின் ஊற்றுக் கண்ணாய்த் திகழ்ந்த மதுரை மாவட்டத்தின் பின்னணியில் அமைந்ததால் அவரது

பிறப்பிலிருந்து வளர்ந்த சூழல் வரை வாழ்வில் ஓட்டத்தில் கண்டு தரிசித்த வாத்தியக்கருவிகளை குறிப்பாக இந்தத் தவில், மேளம், உறுமி ஆகியவற்றின் பயன்பாட்டை உள்வாங்கி அவற்றைத் திரையூடகத்துக்கேற்ப எவ்விதம் செம்மையானதொரு வடிவில் கொண்டு வர முடியும் என்பது அவரின் பிறப்பிலேயே ஊறிப்போன தாகக் கூட எடுத்துக் கொண்டால் மிகையில்லை.

"மாங்குயிலே பூங்குயிலே சேதி ஒண்ணு கேளு" பாடலை இரண்டு வடிவங்களில், ஒன்று மேற்கத்தேய வாத்தியப் பரிமாணத்தி லும், இன்னொன்று கிராமிய இசை கலந்த கரகாட்டப் பாடலாகவும் ஆக்கிய திறனே முன் சொன்ன கூற்றின் ஆதார விளைவாகக் காட்ட முடியும்.

கரகாட்டக்காரன் ஒரு வருடம் ஓடிச் சாதனை புரிந்த படம். இது தில்லானா மோகனாம்பாள் கதையைத் தழுவியது என்பது வெள்ளிடை மலை. ஆனால் இங்கே இந்தப் படத்தின் நிறத்தை மாற்றியது கிராமியக் கலைகளில் ஒன்றான கரகாட்டத்தை மையப் படுத்திய கதையோட்டம். எனவே இளையராஜாவின் இசையும் தோதாகப் பொருந்திப் போக, "முந்தி முந்தி விநாயகனே முப்பத்து முக்கோடி தேவர்களே", "மாங்குயிலே பூங்குயிலே" பாடல்களோடு பிற்சேர்க்கையாக இசைத்த "நந்தவனத்தில் ஒரு ராஜகுமாரி" பாடலு மாக இங்கே குறித்த வாத்தியப் பயன்பாட்டை அடையாளப்படுத்தி நிற்கின்றன, தமிழக நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றான கரகாட்டம் நலிவுற்ற சூழலில் எழுந்த இந்தப் படைப்பு பின்னாளில் புலம் பெயர் தேசங்களில் வாழும் அடுத்த தலைமுறைக் குழந்தைகள் வரை சென்று சேர வழி வகுத்தது என்பது திரையூடகம் எவ்வளவு ஆளுமை மிக்கது என்பதற்கோர் எடுத்துக்காட்டு. இந்தச் செய்தியைப் பகிரக் காரணம். சில ஆண்டுகளுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவில் நியூ சவுத்வேல்ஸ் மாநிலத்தின் பல்கலைக்கழகப் புகுமுகப் பாட நெறியில் தமிழை ஒரு பாடமாக எடுத்த மாணவி "தமிழக நாட்டுப் புறக் கலைகளில் கரகாட்டம்" என்ற ஆய்வுத் தலைப்பை எடுத்த போது அவர் உசாத் துணையாக எடுத்துக்கொண்டதில் ஒன்று கரகாட்டக்காரன் திரைப்படம்.

கங்கை அமரன் தொடர்ந்து இயக்கிய "சக்கரைப் பந்தல்" திரைப்படம் முற்றிலும் மாறுபட்ட கதைப்போக்கைக் கொண்டா லும் அங்கே ஒரு பாடல் பிறக்கிறது இப்படி "உறுமுன்னு உறுமுதடி உறுமி மேளம் தானே" இங்கே எழும் தலைவன் துதிப் பாடலில்

கிராமத்தாரின் கூட்டுக் கொண்டாட்டத்தில் மேள வாத்தியப் பயன்பாடு அழகாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதற்கெல்லாம் முன்னோடியாக அமைந்தது "மலையூர் மம்பட்டியான் படத்தில் வரும் "ஆடுதடி ஆடுதடி உச்சத்துல வச்ச குடம்".

தொண்ணூறுகளில் நாட்டுப்புறக் கலையை மையப்படுத்தி எழுந்த "நாட்டுப்புறப் பாட்டு" படத்தில் "ஒத்த ரூபாயும் தாறேன் ஒரு ஒனப்புத் தட்டும் தாறேன்", "சட்டிப் பொட்டி கழுவவில்ல" போன்ற பாடல்கள் அந்தக் கிராமியக் கலையின் காட்சிப்படுத்தலுக்குத் துணை போந்ததோடு, படத்தின் காதல் காட்சிக்கு எழும்

"கிழக்கால சுவத்துப் பக்கம் செவுளி சொல்லுதடி" பாடலில் கூட இவ்வகை கிராமிய மேள, தாளப் பயன்பாட்டைக் காட்டி யிருப்பது சிறப்பு. படத்தின் எழுத்தோட்டக் காட்சியில் கூட ஆட்டத்துக்குத் தயாராகி முழங்கும் நாதஸ்வர, மேள வாத்தியங்களின் ஓசை பின்னணி இசை நாதமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கும்.

இன்னொன்று, இந்தப் படத்தின் பாடல்களில் இன்னும் எளிமையாக கிராமிய மக்களின் சொல்லாடலை உள்வாங்கிப் பாடல் வரிகளையும் எழுதிய இயக்குநர் கஸ்தூரிராஜாவையும் குறிப்பிட்டே கடக்க வேண்டும்.

கிராமியப் பின்னணியைக் கொண்ட கதையம்சங்களைத் தன் வெற்றிகரமான முதலீடாகக் கொண்ட சங்கிலி முருகனின் "பாண்டி நாட்டுத் தங்கம்" படத்தில் "மயிலாடும் பாறையிலே நாங்க ஆடியிருக் கோம்" என்ற கொண்டாட்டப் பாட்டுக்குப் பயன்படுத்தியதோடு, இன்னும் வெகு சிறப்பாக

"இது நம்ம மதுரை உருமி

இது கோவில்பட்டி பம்பை

இது திருச்சி நாயனம்"

"எடுத்து விட்டேன் தொடுத்து விட்டேன் எங்க ஊருத் தெம்மாங்கு" என்ற அழகானதொரு பாட்டு கிராமிய இசையில் இந்த வாத்தியங்களின் வட்டாரச் சிறப்பையும் சொல்லி நிற்கும்.

"கருத்த மச்சான் கஞ்சத்தனம் எதுக்கு வச்சான்" (புது நெல்லு புது நாத்து) பாடலுக்கு ஒரு உறுமி மேள ஒலியை அப்படியே நடையாகப் பயன்படுத்திய பாங்கும், என் புருஷன் தான் எனக்கு மட்டும் தான் படத்தில் "சாமிகளே சாமிகளே" பாடலுக்கு சோக



இசையாக இந்த மேள வாத்தியப் பயன்பாட்டைக் காட்டியதும் இவ் வாத்தியங்களின் பன்முகப் பாவனையை அடையாளப் படுத்தி நிற்கும்.

கிராமத்துத் தெய்வ வழிபாட்டின் பின்னணியில் எழும் காட்சி அமைப்புகளுக்கு மேளம், உறுமி போன்றவற்றின் பாவனையையும் கச்சிதமாகப் பாவித்திருக்கிறார் இளையராஜா. சுடலைமாடசாமியை மையப்படுத்தி எழுந்த சமூகப் படைப்பான "சின்னத்தாயி" படத்தில் "கோட்டையை விட்டு வேட்டைக்குப் போகும் சுடலை மாடசாமி" சிறார்களோடு உமா ரமணன் பாடும் அப்பாடல் அந்தப் படத்தின் மையப்புள்ளியாக அமைந்திருக்கும்.

இளையராஜாவின் 1000 ஆவது படமான "தாரை தப்பட்டை" மீண்டும் அந்தப் பழைய ராஜாவை மீட்டெடுத்தது போன்றதொரு உணர்வை எழுப்பியது.

"நாயகனின் அறிமுகக் காட்சிக்குப் பயன்படுத்தியதும், இந்தப் படத்தின் முன்னோட்டத்துக்குப் பயன்பட்ட ஒரு சிறு இசைக் கீற்று பின்னர் பாடலாக உருக்கொண்ட "வதன வதன வடி வடிவேலனே" பாடலும், மீள் இசைக்கலவை செய்யப்பட்ட "ஆரம்பமாவதும் பெண்ணுக்குள்ளே" பாடல்கள் ஒரு புறம், இறுதிக் காட்சியில் மேற்கத்தேய இசை ஆர்ப்பரிப்போடு, சங்கு, தாள வத்திய ஒலிச் சேர்க்கையும் இணைந்த ஒரு இசைக்கூட்டில் புதுமை பண்ணி நான்கு தசாப்தம் கடந்த இசைப் பயணத்திலும் இளையராஜாவின் உள்ளே ஊறியிருந்த அந்தக் கிராமியத் தாள வாத்தியங்கள் ஆழ் உறக்கம் விழித்த சிங்கமாய்ச் சிலிர்த்துப் பரவியது.

இவ்விதம் பரவலான திரைப் பின்னணிகளுக்காக தவில், மேளம், உறுமி வாத்தியங்களை இளையராஜா கையாண்டு தனித்து நிற்கின்றார்.

# இளையராஜாவின் இசையில் "ட்ரம்ஸ்"




ஒவ்வொரு இசைக்கருவியும் ஒவ்வொரு ஞாபகப்படிமத்தையும், பண்பாட்டுத் தளத்தையும் பிராந்திய அடையாளத்தையும் கொண்டமைகிறது. இவற்றினைத் தனித்தனியே புரிந்து அழகியல் அடுக்குகளாக்கித் தருகின்ற ஆற்றல் மிக்கவர் இளையராஜா அவர்கள். மரபுக்குள் நின்றும் மரபினை உடைத்தும் நவீன கலப்பிசையினை நமக்கெல்லாம் தந்தவர். அவரது இசையில் "ட்ரம்ஸ்" என்ற கருவியின் பங்களிப்பினை இச்சிறு கட்டுரையில் மதிப்பிட முயல்கிறேன்.

நூதன முரசுத் தொகுதியென தமிழிலே சொல்லப்படுகின்ற "ட்ரம்ஸ்" இசைக் கருவிகளின் கூட்டமைப்பானது பாடலின் நேர இடைவெளியைப் பராமரிக்க இசைக்கப்படுகின்றது. பாடலின் தூங்கல் நகர்வுக்கும் துள்ளல் நகர்வுக்கும் உதவுகின்றது. இந்த இசைக் கருவிகளின்

மா. செல்வதாஸ்



தொகுதியினை இசைஞானி அவர்கள் மிகத்திறமையாகப் பயன் படுத்தியுள்ளார் பாண்டியராஜன், ராமராஜன் போன்ற மெல்லியல்பு நடிகர்களுக்கான சண்டைக் காட்சியினை வன்பண்புக்கு மாற்றி யமைக்க “ட்ரம்ஸ்” ஓசையினை பாவித்திருப்பதனைப் பலபடங் களிலே காணமுடியும்.

தமிழ்சினிமாவின் புதிய அலைப்படங்களுக்கான இடத் தினைக் கபளீகரம் செய்த வணிகத் திரைப்படமாக “சகலகலா வல்லவன்” கூறப்படுகிறது. ஒவ்வொரு புதுவருடப்பிறப்பிலும் S.P.B அவர்களின் குரலில் ஒலிக்கும் Happy New Year வாழ்த்தினை இலகுவில் மறக்க முடியுமா? அவ்வாழ்த்தினை “ட்ரம்ஸ்” இசையினைத் தொடர்ந்தே வெளிப்படுத்துகிறார். “இளமை இதோ இதோ...” என்ற அப்பாடலில் ட்ரம்ஸ் தருகின்ற துள்ளல் இன்பத்தையும் “நான் தான் சகலகலா வல்லவன்” என்ற வரிகளைத் தொடர்ந்து ஒவ்வொரு தடவையும் சத்தமிடும் விபுணவி ஜால்ராவின் (Drum Kit Cymbals) அதிர்வினையும் நேசிக்காதவர்கள் குறைந்தளவே இருப்பார்கள்.


“டிக்டிக்டிக்” திரைப்படத்திலே இடம்பெறும் “இது ஒரு நிலாக்காலம்” பாடல் குதூகலமான ரம்மிய உணர்வினை ஏற்படுத்தவல்லது. ட்ரம்ஸ் ஆரம்ப இசையாக ஒலிக்கும் அப்பாடல் பூரணமாகவே “ட்ரம்ஸ்” கருவியின் ஆக்கிரமிப்போடு காணப்படும். “நாஹ்குதன தீரனன தீரனன” என்ற ஜதியோடு ட்ரம்ஸ் போட்டி போடுகின்ற இடம் இரசனை கொண்டது. இரண்டாவது சரணம் முடியும் சந்தர்ப்பத்தில் மௌனித்து சிறு இடைவெளிக்கு பிறகு சத்தமிடும் ட்ரம்ஸ் இசையினை அவ்வளவு சீக்கிரம் மறக்க முடியாது.

காதலர் இருவர் கருத்தொருமித்த பின்னரான உதடுகளின் சேர்க்கையை முழுப்பாடலில் காட்சிப்படுத்துவதாக ஓம் நமஹா (இதயத்தைத் திருடாதே) பாடல் காணப்படுகின்றது. காதலர்களின் இதய ஒலியான "லப்டப்" ஓசையை ட்ரம்ஸ் கருவியில் வெளிப்படுத்தி பாடல் முழுக்க ஒலிக்கவிட்ட இசைஞானியின் நுட்பம் அருமை யானது.

மெல்லிசைத் தன்மையோடு அமைகின்ற பல பாடல்களிலும் ட்ரம்ஸ் இசையின் அட்டகாசத்தைக் காணமுடியும். நின்னுக்கோரி வர்ணம் (அக்னி நட்சத்திரம்) என்ற மோகன ராகப் பாடலில் பல்லவிக்கும் முதலாவது சரணத்திற்கும் இடையில் இத்தகைய அட்டகாசமான இசைச் சேர்க்கையை ரசிக்கலாம். என் வானிலே ஒரே வெண்ணிலா (ஜானி) பூங்காவனம் புது வனம் (அக்னி நட்சத்திரம்) காதல் ஓவியம் (அலைகள் ஓய்வதில்லை) சந்தனக்காற்றே (தனிக் காட்டு ராஜா) சங்கீத மேகம் (உதயகீதம்) போன்ற மெல்லுணர்வுப் பாடல்களிலும் இசைஞானியின் ட்ரம்ஸ் சிறப்பாக உள்ளது. அதே போன்று ஆசை நூறுவகை (அடுத்த வாரிசு) வச்சுக்கவா உன்னமட்டும் (நல்லவனுக்கு நல்லவன்) அடியே மனம் நில்லன்னா (நீங்கள் கேட்டவை) ஆகிய துள்ளிசைப்பாடல்களிலும் ட்ரம்ஸ் புகுந்து விளையாடியிருக்கும். வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் நிகழும் போட்டி நடனப் பாடல் என்ற களத்தினை இயக்குநர் தெரிவு செய்தால் இசைஞானி "ட்ரம்ஸ்" இசையினையே தேர்வு செய்வார். ஏய் உன்னைத்தானே(காதல் பரிசு), பூமாலை (தங்கமகன்) என்பன இவ்வகைப் பாடல்களுக்கு உதாரணங்களாகும்.

தமிழ்த்திரைப்படங்களின் பல பாடல்களின் ஆயுளை கூட்டியதில் ட்ரம்ஸ் இசையின் வகிபாகமும் குறிப்பிடத்தக்கது இன்னும் என்னை என்ன (சிங்கார வேலன்) ராஜா ராஜாதி ராஜன் (அக்னி நட்சத்திரம்) குருவாயூரப்பா (புதுப்புது அர்த்தங்கள்) என்னம்மா கண்ணு (Mr.பாரத்) போன்று பலபாடல்களைச் சொல்ல லாம். பாடற்காட்சியில் நடிக-நடிகைகளின் உடல் அசைவுகளை ட்ரம்ஸ் ஓசையே பெரும்பாலும் தீர்மானித்துள்ளது. நடன அசைவின் துருதுருப்பினை ட்ரம்ஸ் அதிகப்படுத்துவதை "பரதன்" திரைப்பட "புன்னகையில் மின்சாரம்" பாடலில் காண முடியும். விஜய்காந்திடம் பிரமிப்பான நடன அசைவினை நடன இயக்குநர் வெளிக்கொணர "ட்ரம்ஸ்" துணை செய்துள்ளது.நையாண்டி மேளத்தைக் கூட ட்ரம்ஸ் மூலம் வெளிப்படுத்திய இசை மேதையாக ஞானி காணப்படுகிறார்.

# இளையராஜாவின் இசையில் தபேலா



**த**மிழ்த்திரை இசையில் பேராளுமையாகத் திகழ்பவர் இசைஞானி இளையராஜா. தன் அயராத முயற்சியாலும் இசைஞானத்தாலும் தமிழில் மாத்திரமன்றி பல்வேறு மொழிகளிலும் இசைகலந்து தனி முத்திரையைப் பதித்தவர். இவரது பாடல்கள் திரைக் கதைகளோடு பின்னியனவாய் அவற்றைத்தாங்கிச் செல்லும் வல்லமைகொண்டன. பாடல்வரிகள், பாடகர், இசைக்கருவிகள் என எல்லாவற்றுக்கும் உரிய முக்கியத்துவத்தை வழங்கி அவர் அளிக்கும் இசைப் படையல் செவிக்கும் உள்ளத்துக்கும் உயிர்ப்பளிக்கும். “இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்” என்ற வள்ளுவரின் வாய் மொழிபோல் பாடலுக்குத் தகுந்தவற்றைத் தேர்ந்து தக்க இசைக்கோவையாய் பிரசவிப்பவர். இவர் பாடல்களில் வயலின், தபேலா, புல்லாங்குழல் ஆகியன

ந.குகபரன்

அதிக முக்கியத்துவம் பெறும். அவற்றில் தபேலா தனி அடையாளம் மிக்கது.

தபேலா என்பது இந்துஸ்தானி இசையில் பிரதான வாத்தியம். இதனை தப்லா, இருமுகமுழவு, கைம்முரசு எனப் பலவாறு அழைப்பர். தபேலா இரு பாகங்களை உடையது. இடதுகையால் வாசிக்கப் படுவது பயான் என்றும் வலது கையால் வாசிக்கப்படுவது தயான் என்றும் அழைப்பர். தபேலாவின் ஓசையை வைத்து இப்பாடல் இளையராஜாவினது என இனங்காணும் அளவிற்கு பாடல்களில் தபேலாவின் ஒலி நேர்த்தியாக வெளிப்பட இசைக்குறிப்புகளை எழுதுகிறார். இளையராஜாவின் வாத்தியக்குழுவில் கண்ணையா, தபேலா பிரசாத், பாபுராம் முதலான புகழ்பெற்ற தபேலாக் கலைஞர்கள் இடம்பெற்றுவந்தனர்.

இசைஞானி மண்ணின் வாசத்தை இசையாக்கியவர். காலங்களைக் கடந்து பயணிப்பவர். அவ்வக்காலத்திற்குரிய வகையில் தனது வெளிப்பாடுகளை முன்வைப்பவர். இசையில் புதிய பரிசோதனைகளை மேற்கொள்பவர். பாட்டின் உயிரைப் பேணிக் கொள்வதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர். இளையராஜாவின் பாடல்களில் வரும் தபேலா வாத்தியம் உணர்வுவழி மொழியைப் பரவ வழிசெய்யும். சில இடங்களில் ஒரு கட்டியக்காரனைப்போல கம்பீரம் கொள்ளும். பறவையின் சிறகுபோலப் பாடலை அரவணைக்கும்.

கோபுர வாசலிலே திரைப்படம் **1991** இல் வெளி வந்தது. அதில் இடம்பெற்றுள்ள பாடல்களில் தபேலாவின் பங்கு அதிகம். அவற்றில் வாலியின் வரிகளுக்கு எஸ். ஜானகியின் குரலில் ஒலிக்கும் “தாலாட்டும் பூங்காற்று நானல்லவா...” பாடலில் சரணத்தின் ஆரம்பத்தில் வரும் தபேலாவின் இசை தனிமுத்திரை. சரணம் முடியும்போது தாளக்கட்டு மாறி வரும் அழகோ தனி. கேட்குந் தோறும் இனிக்கும் பாடலிது.

**1992** இல் வெளிவந்த திரைப்படம் இன்னிசை மழை. இதில் வரும் “மங்கை நீ மாங்கனி...” பாடலில் இளையராஜாவின் குரலோடு தபேலா பின்னிவரும். “கைவீசிப் போகின்ற வைகாசி மேகம் கைசேர்த்துப் பாடாதோ தன்யாசி ராகம்..” என்று தொடங்கும் குரலோடு தபேலாவும் கைகோர்க்கிறது. எஸ். பி. பாலசுப்ர மணியத்தின் குரலில் “வா வெண்ணிலா உன்னைத் தானே வானம் தேடுதே..” என மெல்லத் திறந்தது கதவு படத்தில் வெண்ணிலாவை



தபேலாவின் இசையோடு இசைஞானி அழைக்கும் பாங்கு தனிலயம்.

இசைஞானியின் பாடல்கள் உயிரில் கலந்து உறைவதற்கு தபேலா பெரும்பங்காற்றுகிறது. இதற்கு பல்வேறு பாடல்களைச் சான்றுகூறமுடியும். நாடோடித் தென்றல் படத்தில் வரும் “மணியே மணிக்குயிலே மாலை இளங்கதிரழகே...” பாடலில் “பூமரப் பாவை நீயடி இங்கு நான் பாடும் பாமர பாடல் கேளடி” என தபேலாவின் இசையோடு காதலை கலந்து படைக்கும் பாங்கு இளையராஜாவிற்கே உரியது.

“பூவே செம்பூவே...” பாடல் சொல்லத்துடிக்குது மனசு படத்தில் இடம்பெற்றது. ஜேசுதாஸின் குரலில் ஒலிக்கும் இப்பாடலில் waltz என்ற இசை வடிவத்தை இளையராஜா தனக்குரிய வகையில் கையாண்டுள்ளார். இதிலும் தபேலாவின் பங்கு முக்கியமாக உள்ளது.

“ஒரு நாளும் உனைமறவாத பிரியாத வரம் வேண்டும்” என்று தொடரும் பாடல் எஜமான் படத்தில் இடம்பெற்றுள்ளது. பாடலின் தொடக்கத்தில் இருந்தே தபேலாவின் இசை மிடுக்கோடு ஒலிக்கிறது. மெல்லத் திறந்தது கதவு திரைப்படத்தில் இடம்பெற்ற “தில் தில் தில் மனதில்...” பாடலில் Jazz இசைக்கு புதிய இந்திய அடையாளத்தைக் கொடுத்தவர் இளையராஜா.

பொன்னுக்குத் தங்கமனசு திரைப்படத்தில் “தேன்சிந்துதே

வானம் உனை எனை தாலாட்டுதே…” பாடல். அதில் தபேலாவும் இணைந்து தாலாட்டுவது போல அமையும் பாங்கு தனிச்சிறப்பு. நாடோடிப் பாட்டுக்காரன் படத்தில் வரும் “ஆகாயத்தாமரை அருகில் வந்ததே…” பாடலில் நதியின் இசைபோல தபேலா உருகிப்பரவும்.

இசைஞானியின் “மல்லிகை மொட்டு மனசைத் தொட்டு…” பாடல் சக்திவேல் படத்தில் உள்ளது. பாடலில் தபேலா வரும் இடங்களில் உள்ள குழைவு கேட்போரைக் கிறங்கவைக்கும். உடன் பிறப்பு படத்தில் “நன்றி சொல்லவே உனக்கு” பாடலில் இடையிசை யாக வேறு வாத்தியங்கள் ஒலிக்கும். பல்லவியிலும் சரணத்திலும் தபேலா உச்ச இன்பத்தை வழங்கும்.

மூன்றாம் பிறை படத்தில் வரும் “கண்ணே கலை மானே கன்னி மயிலென…” பாடலில் தனித்து ஒலிக்கும் தபேலா “என்னுள்ளே எங்கோ ஏங்கும் கீதம்…” என்ற ரோசாப்பூ ரவிக்கைக்காரி படப்பாடலில் அந்த நாயகியின் ஏக்கத்தைத் தாங்கியவாறு பயணிக்கும் பாங்கோ தனி. “மண்ணில் இந்தக் காதல் இன்றி யாரும் வாழ்தல் கூடுமோ” என்று கேளடி கண்மணி படத்தில் எஸ்.பி.பால சுப்பிரமணியத்தின் குரலோடு புல்லாங்குழலும் தபேலாவும் பிணைந்து வரும் ஓசையை என்னவென்று வர்ணிப்பது.

“வா பொன்மயிலே…” பாடலில் புல்லாங்குழல், ட்றம்ஸ் இசையோடு ஆண்குரல் ஆரம்பமாக தபேலாவும் இணைந்து தரும் இன்பம் அலாதியானது. சிலபாடல்களில் ஏனைய வாத்தியங்களை விட தபேலாவின் கம்பீரம் அதிகாரம் செய்யும். ஆனால் அதற்குள்ளே சொற்கள் மறைபடாமல் சரியான இடை வெளியில் தாளத்தினை அமைத்திருப்பார் இசைஞானி. இதற்கு செண்பகமே செண்பகமே படத்தில் வரும் “வாசலிலே பூசணிப்பூ வச்சதென்ன…” பாடலைக் குறிப்பிடலாம்.

“முத்து மணி மாலை…”, “சின்னப் பொண்ணு சேலை…”, “போவோமா ஊர்கோலம்…”, “ஒரு நாளும் உனை மறவாத…”, “மதுரை மரிக்கொழுந்து வாசம்…”, “ஊரெல்லாம் உன்பாட்டுத் தான்…” என இளையராஜாவின் இசையில் தபேலா இசையின் வண்ணம் கலந்திருக்கும் பாடல்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம். அப்பாடல்கள் நாளெல்லாம் நம்மோடு கலந்திருக் கின்றன. பண்ணைப்புரத்தில் தோன்றிய இந்த மகாகலைஞனின் பாடல்கள் காலங்கடந்து நிலைபெற்றிருக்கும்.

# இளையராஜாவும்
# ஹார்மோனியமும்



நாம் வாழும் காலத்தின் இசை வரலாறாக எமது இதயக்கோயிலில் உதயகீதமாய் வாழும் இசைஞானி இளையராஜாவின் இசை அடையாளமாகத் திகழும் ஹார்மோனியம் குறித்து எழுதுவதைப் பெரும்பேறாகக் கருது கின்றேன். ஹார்மோனியம் என்பது விசைப் பலகை வகை சார்ந்த இசைக்கருவியாகும். கருவியின் உள்ளே அமைந்த உலோக நாக்குகளின் வழியே காற்றுச் செல்லும் போது ஒலி உண்டாகிறது. வெளியே இருந்து துருத்தியால் உறிஞ்சப்படும் காற்று உலோக நாக்குகளைத் தடவி இசையை எழுப்புகிறது. பிரஞ்நாட்டை சேர்ந்த அலெக்ஸ்சாண்டர் தெபைன் என்பவரால் ஹார்மோனியம் உருவாக்கப்பட்டது. வரலாற்றில் மேலைப்புலத் தொடர்பு இருப்பினும், இன்று கீழைத்தேச வாத்திய அடையாளமாக மாறிவிட்ட நிலையினைக் காண்கின்றோம். ஒரு இசைக்கருவி

புலோலியூர்
வேல்நந்தகுமார்

மிகச் சிறந்த இசைக்கலைஞர் ஒருவரைச் சேருகின்றபோது அடையும் மாற்றம் என்பதே வேறு! அதுவே தமிழிசையின் பேறு எனச் சிந்திக்க வைக்கும் வகையில் இசைஞானி இளையராஜாவிடம் வந்து சேர்ந்து, அவரோடு வாசம் செய்யும் ஹார்மோனியம் நிகழ்த்தும் அற்புதங் களை விரிவாக நோக்குவோம்.

இசைஞானி இளையராஜாவின் அடையாளமாக அவரது விருப்புக்குரிய இசைக்கருவியாக ஹார்மோனியம் அமைகிறது. சின்னஞ்சிறு வயதில் இருந்தே ஹார்மோனியம் மீதான காதல் அவரிடம் ஆரம்பித்து விட்டது. "பொன்னையா ஆசாரி" செய்த ஹார்மோனியத்தை இளையராஜாவின் அண்ணன் பாவலர் வரதராஜன் வைத்திருந்தார். அண்ணனுக்குத் தெரியாமல் அதனை எடுத்து வாசித்துப் பலமுறை அடியும் வாங்கியுள்ளார். பின்னாளில் அதே ஹார்மோனியத்தை அண்ணனிடம் இருந்து பரிசாகப் பெற்றார். இன்றுவரை அதனைப் பத்திரமாக வைத்திருக்கின்றார். வாசித்தல் என்பதற்கே புதிய அர்த்தத்தை தன் கைவிரலசைவுகள் வழி ஹார்மோனியம் மூலம் வழங்கியவர் அவர். காலத்தை வென்று வாழும் வகையில் அவரது இசை அமைய, மெட்டுக்கள் பிரசவிக்க ஹார்மோனியமே அடித்தளமாய் அமைந்தது. இன்று அவர் எல்லா வகை இசைக்கருவிகளைக் கையாளும் ஆற்றலையும், சிம்பொனி இசைவடிவத்திற்கு பொருத்திய புதிய இசை குறிப்புகளைக் கண்டறியும் சிறப்பினையும் பெற்றிருந்தாலும் நடைபயின்ற "பால் நிலாப்பாதையினை" மறக்காத நன்றியோடு காணப்படுகின்றார். இசையை எதற்காகவும் விட்டுக் கொடுக்காத ஞானச்செருக்கு "எல்லாம் கடவுளும் நீங்களும் கொடுத்த வரம்" என்ற தன்னடக்கமும், திருவாசக இசை போன்ற புத்திசையும் அவரை ஏனைய இசைக் கலைஞர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் உன்னதங்களாய் விளங்குகின்றன.

இளையராஜா தனது கற்பனையில் உண்டாகும் மெட்டுகளை ஹார்மோனியத்தில் இசைத்தும் தத்தகரமாகச் சந்தங்களைச் சொல்லியும் பாடல்களை உருவாக்குகிறார். அத்தனை பாடல்களின் பிறப்பிடமாக அவரது ஹார்மோனியம் அமைகிறது. சில வேளை களில் அவரே ஒரு ஹார்மோனியம் தானோ என எண்ண வைக்கின்ற அபூர்வ இசை அனுபவங்களும் ஏற்பட்டுள்ளன. அவரது மெட்டுக் களுக்குப் பொருத்தமான வார்த்தைகளை உரிய இடத்திலே அமர்த்துதலே பாடலாசிரியர்களது வேலை. பொருத்தமாக

*அமையும் போது பாடல்கள் கவனிக்கப்படுகின்றன. பாடல் வரிகள் சிறப்பாக இல்லாவிட்டாலும் இளையராஜாவின் இசை அனை வரையும் ஈர்த்து விடுகின்றது. இதனால் பாடகர்களும் பாடலாசிரியர் களும் பெருமை பெறுகின்றனர். இவ்வகையில் அன்னக்கிளிக்கு பிற்பட்டகாலம் தமிழ் சினிமா இசை வரலாற்றின் சிறப்புமிக்க காலமாய் அமைகிறது. எஸ்.பி.பாலசுப்பிரமணியம், யேசுதாஸ், மனோ, ஜானகி, சித்ரா போன்ற பாடகர்களும் சதானந்தன், அருண் மொழி போன்ற கருவியாளுகை மேதைகளும் கண்ணதாசன், வாலி, வைரமுத்து போன்ற பாடலாசிரியர்களும் இளையராஜாவோடு இணைந்து அக்காலத்தின் இசையினை மேம்படுத்தியுள்ளனர். தனக்கென ஒருபாதை வகுத்துப் பயணித்த இசை வழிகாட்டியாக இளையராஜா அமைகின்றார் என்றால் அதுமிகையல்ல. தமிழிசை மனங்களின் பீடத்தில் அவருக்குக் கிடைத்துள்ள உயர்மதிப்பு “ஒஸ்கார் விருதினை” விட மேலானது. இசைத்தட்டு, இசைப்பேழை, இறுவெட்டு என்னும் மூன்று தலைமுறை வடிவத்திலும் “கோட்டையின்றிக் கொடியுமின்றி” ராஜாவாகவே காணப்பட்டார். சாகர சங்கமம்(தெலுங்கு) சிந்து பைரவி, ருத்ர வீணை (தெலுங்கு) பழசிராஜா (மலையாளம்) தாரை தப்பட்டை என ஐந்து தேசிய விருதுகளுடன் திகழ்கிறார். 2003 இல் BBC வானொலி 165 நாடுகளில் நிகழ்த்திய கருத்துக் கணிப்பில் “அடிராக்கம்மா கையைத் தட்டு” என்ற பாடல் நான்காவது இடத்திலே அமைந்தது. இத்தகைய பெருமை களைத் தமிழுக்குப் பெற்றுத் தந்தவர் இசைஞானி அவர்களே!*

*தமிழ்த்திரைப்படங்கள் பலவற்றில் இசையின் அடையாள மாகக் கதாபத்திரங்கள் ஹார்மோனியத்தை சுமந்து திரிவதைப் பார்த்திருக்கின்றோம். அவ்வாறான திரைப்படங்களில் இளையராஜா வின் இசை தனித்துத் தெரியும். கதாபாத்திரம் தன்னைப் போல இசையமைப்பாளர் என்பதால் அப்பாத்திரத்தோடு பொருந்தி உச்ச பட்ச சந்தோசத்தோடு இசையமைத்து விடுகின்றாரோ என எண்ணத் தோன்றுகின்றது. விழியில் விழுந்து (அலைகள் ஓய்வதில்லை) பூவை எடுத்து ஒரு மாலை (அம்மன் கோயில் கிழக்காலே) நினைத்தது யாரோ (பாட்டுக்கு ஒரு தலைவன்) வெள்ளிநிலவே நீலக்கடலே (பாட்டு வாத்தி யார்) போன்ற திரைப்படங்கள் இவ்வகையிலே குறிப்பிடத்தக்கன.*

*இளையராஜாவின் ஹார்மோனியத்திலிருந்து பிறந்த பாடல்கள் இரசிகர்களை மட்டுமல்ல இசை மேதைகளையும் ஈர்க்கும்.*



பிற்பட வந்த இசையமைப்பாளர்களுக்கு நல்வழிகாட்டியாகவும் அமையும் "பன்னீர்ப்புஸ்பங்கள்" திரைப்படத்தில் இடம்பெற்ற "ஆனந்த ராகம்..." என்ற பாடலானது சிம்மேந்திர மத்திமம் என்ற ராகத்திலே அமைந்ததாகும். அப்பாடலால் ஈர்க்கப்பட்டு இசை யமைப்பாளர் பாலபாரதி "அமராவதி" திரைப்படத்தில் "தாஜ்மஹால் தேவையில்லை" என்ற பாடலை உருவாக்கியுள்ளார். "அன்னக் கிளி உன்னைத் தேடுதே" என்ற பாடல் நாட்டார் இசையை மைய இழையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இந்நுட்பத்தினை "அசுரன்" படத்திலே "எள்ளுவய பூக்கலையே" என G.V பிரகாஷ் நீட்சியாகக் கையாள்கிறார்.

"இந்த உலகிலே எனக்கிருக்கும் ஒரே நண்பன் ஹார்மோனியம் தான்" என்று இளையராஜா பல மேடைகளில் குறிப்பிட்டுள்ளார். இளையராஜாவின் ஹார்மோனியம் அதி அற்புதமான மெட்டுகளை எல்லாம் பிரசவிக்கும். அச்சந்தர்ப்பத்திலே பாடலாசிரியர்கள் திணறி விடுவதும் உண்டு. "இதயம் ஒரு கோவில்" என்ற பாடலுக்கான மெட்டிலே சொற்களை இணைக்க முடியாமல் பாடலாசிரியர் எம்.ஜி.வல்லபன் திணறியதால், அப்பாடலை இறுதியில் இளையராஜாவே எழுதியுள்ளார்.

ஆச்சரியமான விடயங்களை எல்லாம் இவர் ஹார்மோனியம் போன்ற இசைக்கருவிகளின் துணையுடன் திரைப்படப்பாடல் களிலே புகுத்தியுள்ளார் ஒன்றுக்கு மேற்பட்ட வேறு வேறு தனியிழை களால் உருவான டியூன்களை ஒன்றாகப் பின்னும் “Counter Point” என்ற நுட்பத்தினை “சிட்டுக்குருவி” திரைப்படத்திலே கையாண்டுள்ளார். “என் கண்மணி உன் காதலி” என்ற பாடல் தனியிழைகளால் ஒரே நூலை உருவாக்கும் நுட்பத்தோடு அமைந்திருக்கும். மகிழ்ச்சிப் பாடலொன்றின் மெட்டிலே சோகப்பாடலும் இடம் பெறுமாயின் அந்த சோகக் கதவினைத் திறக்கும் தயார்ப்படுத்தல் மகிழ்ச்சிப் பாடலிலே காணப்படும். மகிழ்ச்சிப் பாடலின் மெட்டிலே மெலிதான சோக நுண்சாவியை வைத்துவிடுவார். ஒரு ராகம் பாடலோடு (ஆனந்தராகம்) வெள்ளைப்புறா ஒன்று (புதுக்கவிதை) சின்னப் பூங்கிளி (பார்வதி என்னைப் பாரடி) நீதானே நாள் தோறும் (பாட்டு வாத்தியார்) போன்ற பாடல்களை இதற்கான உதாரணங்களாகக் கொள்ள முடியும்.

கர்நாடக இசையை தமிழ்சினிமா இசையுள் புகுத்திய பெருமையிலும் அவரது ஹார்மோனியத்தின் பங்களிப்பு முக்கிய மானதாக இருந்துள்ளது. இதற்காகக் கர்நாடக இசைக்கலைஞர்கள் பலரால் பாராட்டப் பட்டுள்ளார்.

பத்மவிபூசன் என்ற உயரிய விருதைப்பெற்ற முதலாவது இசையமைப்பாளர் என்னும் சிறப்பும் இவருக்குண்டு. வயலின் இசைக்காகக் குறிப்பினை எழுதி, மண்டலினில் வெளிப்படுத்தும் தற்புதுமையான சிந்தனைக்கும் சொந்தக்காரராகத் திகழ்கிறார்.. “தென்றலே என்னைத் தொடு” திரைப்படத்தில் “புதிய பூவிது பூத்தது” பாடலில் அந்த அதிசயத்தை நிகழ்த்தியுள்ளார். இளையராஜாவின் இசைக்கடலுக்குள் இருந்து சில முத்துக்களையே எடுத்துக் காட்டியுள்ளேன். பாடல் இசைக்கு மட்டுமன்றி பின்னணி இசையிற் கூட ஹார்மோனியத்தினைச் சிறப்பாகக் கையாண்டுள்ளார். குறிப்பாக “சிந்துபைரவி” போன்ற திரைப்படங்களைக் கூறலாம்.

பண்ணைப்புரம் சின்னத்தாய் தந்த தமிழ்ச்சிகர இசையின் அடையாள இசைக்கருவியான ஹார்மோனியத்தை எழுதக்கிடைத்த இவ்வாய்ப்பினைப் பெரும் பேறாகக் கருதி, இசைஞானி இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து எம்மை மகிழ்விக்க வேண்டுமென இறைவனைப் பணிந்து இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

தமிழ்நாடு சேலம் மாநகரத்தைச் சேர்ந்த K.பரந்தாமன் அவர்கள், இசைக்கருவிகளை வைத்து இளையராஜாவின் முகவுருவினைக் கணினி உதவியோடு வரைந்துள்ளார். கரு விழிகள் ஹார்மோனியத்தின் பாகத்தாலும், குங்குமம் கடம் எனும் கருவியாலும், கண்ணாடி Chimes என்னும் கருவியாலும், கண்ணாடிச் சட்டகம் கிளரினெட் (Clarinet) கருவியாலும் வெகுநுட்பமாக உருவாக்கப்பட்டு உள்ளன. வயலின், மிருதங்கம், புல்புல் தாரா, வீணை, தபேலா, தவில், கிற்றார், கஞ்சிரா, வில், மவுத் ஓகன், சேக்ஸபோன் உட்படப் பல்வேறு இசைக்கருவிகளால் வடிவமைத்துள்ளார். தற் புதுமையான நுட்பங்களோடு இசைஞானியின் பன்முகப் பரிமாணங்களை வெளிப்படுத்திவரும் இவர், இளையராஜா மீது முடிவிலிப் பேரன்புடையவர்.



**“இந்த நூலிலுள்ள கட்டுரைகள் சினிமா இசையில் இளைய ராஜா பயன்படுத்திய இசைக்கருவிகள், அவற்றை வாசித்த இசைக்கலைஞர்கள், அந்த இசைக்கருவிகள் பாடல்களில் வெளிப்படும் விதம், அவை தரும் உணர்வுகள், படத்தில் வரும் காட்சிப்படுத்தலுக்கும் இசைக்கருவிக்குமான தொடர்பு முதலான விடயங்களை பாடல்களையும் அவை வந்த படங்களையும் எடுத்துக்காட்டி விளக்குகின்றன. சினிமா எனும் ஊடகத்தின் பல்லூடக சேர்க்கைத் தன்மையை (Hybrid) பின்புலமாகக் கொண்டே இளையராஜாவின் இசையின் சிறப்புகள் இந்தக் கட்டுரைகளில் இரசிக்கப்படுகின்றன.”**

**இ.இராஜேஸ்கண்ணன்.**

**முதுநிலை விரிவுரையாளர்**

**சமூகவியல் துறை யாழ். பல்கலைக்கழகம்**

ISBN 955524963-6

9789555249638